05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கவிஞர் வாலியின் திரையிசைப்பாடல்களில் அகத்திணை மரபு

LEGASI *AKATTHINAI* DALAM LIRIK LAGU TAMIL GUBAHAN VAALI

பழனி கிருஷ்ணசாமி

PALANI A/L KRISHNASAMY

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH
IJAZAH DOKTOR FALSAFAH (KESUSASTERAAN TAMIL)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2018

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுருக்கம்

வாலி 1000 திரையிசைப்பாடல்கள் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிஞர் வாலி இயற்றிய 1000 திரையிசைப்பாடல்களில் வெளிப்பட்டுள்ள அகமரபு கூறுகளை அடையாளங்காண்பதும், அவற்றை அகத்திணைவாரியாகப் பகுப்பதும், அப்பாடல்களில் மிளிர்ந்துள்ள அக இலக்கியச் செல்வாக்கை மதிப்பிடுவதும் இந்த ஆய்வின் நோக்கங்களாகும். பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு அகத்திணைக் கோட்பாட்டை மையமாகக் கொண்டு பகுப்பாய்வு அடிப்படையிலும் நூலக ஆய்வு அடிப்படையிலும் நடத்தப்பட்டது. ஆய்வின் வழி, 1000 பாடல்களுள் 673 பாடல்கள் அகமரபு கூறுகளைக் கொண்டுள்ளது அடையாளம் காணப்பட்டது. அவற்றுள் 279 குறிஞ்சித்திணைப் பாடல்களாகவும், 161 முல்லைத்திணைப் பாடல்களாகவும், 132 மருதத்திணைப் பாடல்களாகவும், 58 நெய்தல் திணைப் பாடல்களாகவும், 44 பாலைத்திணைப் பாடல்களாகவும் திணைப்பகுப்புச் செய்யப்பட்டன. மேலும், கவிஞர் வாலி தம் பாடல்களில் அக இலக்கியங்களின் செல்வாக்கை இழையோடவிட்டுள்ள பாங்கும் இந்த ஆய்வின் வழி நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் கவிஞர் வாலி இயற்றிய தமிழ்த் திரையிசைப்பாடல்களின் அக இலக்கியத் தரம் உயர்நிலையில் உள்ளது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வு எதிர்காலத்தில் திரைப்பாடல்கள் எழுத விழையும் கவிஞர்கள் தங்களின் படைப்பை மேம்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமையும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

LEGASI *AKATTHINAI* DALAM LIRIK LAGU TAMIL GUBAHAN VAALI

ABSTRAK

Kajian ini bertujuan untuk mengenal pasti unsur-unsur *Akatthinai*, menganalisis legasi *Akatthinai* serta menilai pengaruh sastera *Akam* yang terdapat dalam lirik lagu Tamil gubahan Vaali yang dimuatkan dalam kumpulan lirik lagu Tamil *Vaali 1000*. Kajian ini menggunakan pendekatan kualitatif berdasarkan kaedah kepustakaan dan kaedah analisis teks. Teori *Akam* yang dipelopori oleh Tholkaappiyar telah digunakan untuk menjalankan kajian ini. Dapatan kajian menunjukkan bahawa 673 daripada 1000 lagu gubahan Vaali mempunyai unsur *Akatthinai*. Daripada jumlah tersebut 279 buah lagu digubah berdasarkan *Kurinjitthinai*, 161 buah lagu digubah berdasarkan *Mullaitthinai*, 132 buah lagu digubah berdasarkan *Maruthatthinai*, 58 buah lagu digubah berdasarkan *Neythalthinai* dan 44 buah lagu digubah berdasarkan *Paalaitthinai*. Dapatan kajian turut membuktikan kewibawaan Vaali memuatkan pengaruh sastera *Akam* dalam gubahannya. Kajian ini turut menunjukkan bahawa lirik lagu Tamil gubahan Vaali mempunyai nilai sastera *Akam* yang tinggi. Implikasi daripada kajian ini akan menjadi panduan kepada bakal penggubal lirik lagu Tamil untuk menambah-baik hasil gubahan mereka.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

THE LEGACY OF *AKATTHINAI* IN POET VAALI'S TAMIL SONG LYRICS

ABSTRACT

This study aims to identify the elements of *Akamtthinai*, analyze the legacy of *Akatthinai* and assess the highlights of *Akam* literature influence found in Tamil song lyrics composed by Vaali, featured in *Vaali 1000* Tamil song anthology. This study uses qualitative approach based on the library method and text analysis method. The Theory of *Akatthinai* pioneered by Tholkaappiyar was used to carry out this study. The findings show that there are 673 of the 1000 songs composed by Vaali have the elements of *Akatthinai*. Of the total, 279 songs were composed based on *Kurinjitthinai*, 161 songs composed based on *Mullaitthinai*, 132 songs composed based on *Maruthatthinai*, 58 songs composed based on *Neythalthinai* and 44 songs composed based on *Paalaitthinai*. The findings also show Vaali's ability to include the influence of *Akam* literature in its quotes. This study proves that Tamil song lyrics composed by Vaali have high level of *Akam* literary value. The implications of this study will be a guide to future Tamil songwriters to improve their composition.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உள்ளடக்கம்

	பக்கம்
PERAKUAN KEASLIAN PENULISAN	ii
BORANG PENGESAHAN PENYERAHAN TESIS	iii
நன்றி நவில்தல்	iv
சுருக்கம்	v
ABSTRAK	vi
ABSTRACT	vii
உள்ளடக்கம்	viii
அட்டவணைப் பட்டியல்	xvi
குறிவரைவுப் பட்டியல்	xxi
சுருக்கக் குறியீட்டுப் பட்டியல்	xxii
பின்னிணைப்புப் பட்டியல்	xxiii
இயல் 1 அறிமுகம்	1
1.1 முன்னுரை	1
1.2 ஆய்வுப் பின்னணி	2
1.3 ஆய்வுச் சிக்கல்	7
1.4 ஆய்வு நோக்கம்	14

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.5 ஆய்வு வினா 15

1.6 ஆய்வுப் பயன் 15

1.7 ஆய்வு எல்லை 16

1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள் 17

1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள் 18

1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள் 18

1.9 கருச்சொற்கள் 18

1.9.1 தமிழ்த் திரையிசைப்பாடல்கள் 18

1.9.2 கவிஞர் வாலி 23

1.9.3 அகத்திணை மரபு 26
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
1.10 தொகுப்புரை 51

இயல் 2 முந்தைய ஆய்வுகள் 52

2.1 முன்னுரை 52

2.2 முந்தைய ஆய்வுகள் 53

2.2.1 திரையிலக்கியம் 53

2.2.2 கவிஞர் வாலி 57

2.2.3 அகத்திணை 59

2.3 தொகுப்புரை 66

இயல் 3 ஆய்வு நெறிமுறை 68

3.1 முன்னுரை 68
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.2 ஆய்வு வடிவமைப்பு 69

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 70

3.4 ஆய்வு அணுகுமுறை 70

3.4.1 நூலாய்வு முறை 71

3.4.2 விளக்கமுறை ஆய்வு 73

3.5 தரவு சேகரிப்பு முறை 73

3.6 தரவு பகுப்பாய்வு முறை 74

3.6.1 தரவு வாசிப்பு 74

3.6.2 தரவுத் தெரிவு 75

3.6.3 தரவு வகைப்பாடு 75

3.7 ஆய்வுக் கோட்பாடு 76

3.7.1 கோட்பாட்டு அறிமுகம் 76

3.7.2 திணை – விளக்கம் 78

3.7.3 அகத்திணை விளக்கம் - 80

3.7.4 ஐந்திணை 83

3.7.5 திணைப்பொருள்கள் 84

3.7.6 முதற்பொருள் 86

3.7.6.1 நிலம் 87

3.7.6.2 பொழுது 90

3.7.7 கருப்பொருள் 92

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.7.8 உரிப்பொருள் 95

3.7.9 திணைமயக்கம் 98

3.7.10 மக்கட்பெயர் 102

3.7.11 கைக்கிளை 105

3.7.12 பெருந்திணை 109

3.7.12.1 ஏறிய மடற்றிறம் 111

3.7.12.2 இளமைதீர் திறம் 112

3.7.12.3 தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் 113

3.7.12.4 மிக்க காமத்து மிடல் 114

3.7.13 கைக்கிளை, பெருந்திணைக்குரிய மாந்தர் 115

3.7.14 பிரிவுச்செய்திகள் 117

3.7.14.1 கற்பிற் பிரிவுகள் 118

3.7.14.2 ஓதலும் தூதும் 119

3.7.14.3 பகைவையிற் பிரிவு 121

3.7.14.4 காவற்பிரிவும் பொருட்பிரிவும் 122

3.7.14.5 பரத்தையிற் பிரிவு 125

3.7.14.6 பிரிவிற்குரிய காலம் 125

3.7.14.7 கடல் செலவு தலைவியுடன் இல்லாமை 126

3.7.14.8 மடலேறாமை 126

3.7.15 திணை உணரும் வகை 126

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.7.16 அகப்பாடல் மரபு 129

3.7.17 பெயர் சுட்டா மரபு 131

3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 132

3.9 தொகுப்புரை 133

இயல் 4 தரவுப் பகுப்பாய்வு 135

4.1 முன்னுரை 135

4.2 குறிஞ்சித்திணை 137

4.2.1 முதற்பொருள் 139

4.2.1.1 நிலம் 140

4.2.1.2 பொழுது 150

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.2.2 கருப்பொருள் 161

4.2.2.1 தெய்வம் 165

4.2.2.2 பறவை 171

4.2.2.3 நீர் 182

4.2.2.4 உணவு: 187

4.2.3 உரிப்பொருள் 192

4.3 முல்லைத்திணை 214

4.3.1 முதற்பொருள் 215

4.3.1.1 நிலம் 216

4.3.1.2 பொழுது 222

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.3.2 கருப்பொருள் 236

4.3.2.1 தெய்வம்: 238

4.3.2.2 மக்கள்: 248

4.3.2.3 விலங்கு; 252

4.3.2.4 பூ 255

4.3.3 உரிப்பொருள் 265

4.4 மருதத்திணை 275

4.4.1 முதற்பொருள் 277

4.4.1.1 நிலம் 278

4.4.1.2 பொழுது 286
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
4.4.2 கருப்பொருள் 288

4.4.2.1 தெய்வம்: 290

4.4.2.2 மக்கள்: 291

4.4.2.3 பறவை: 294

4.4.2.4 நீர் 298

4.4.2.5 பூ 301

4.4.2.6 தொழில் 310

4.4.3 உரிப்பொருள் 314

4.5 நெய்தல் திணை 334

4.5.1 முதற்பொருள் 336
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.1.1 நிலம் 337

4.5.1.2 பொழுது 351

4.5.2 கருப்பொருள் 354

4.5.2.1 மக்கள் 356

4.5.2.2 தொழில் 358

4.5.2.3 உணவு 362

4.5.3 உரிப்பொருள் 363

4.6 பாலைத்திணை 371

4.6.1 முதற்பொருள் 373

4.6.1.1 நிலம் 373

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.6.1.2 பொழுது 381

4.6.2 கருப்பொருள் 383

4.6.2.1 பறவை 385

4.6.3 உரிப்பொருள் 388

4.7 தொகுப்புரை 401

இயல் 5 ஆய்வுக் கண்டடைவுகளும் பரிந்துரைகளும் 403

5.1 முன்னுரை 403

5.2 ஆய்வுக் கண்டடைவுகள் 405

5.2.1 அகத்திணை மரபு 405

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

5.2.2 முதல், கரு, உரிப்பொருள் அடிப்படையிலான திணைப்பகுப்பு 415

5.2.3 அக இலக்கியங்களின் செல்வாக்கு 421

5.3 எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள் 423

5.4 தொகுப்புரை 424

மேற்கோள் 427

பின்னிணைப்பு 439

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அட்டவணைப் பட்டியல்

அட்டவணை எண் **பக்கம்**

அட்டவணை எண்		பக்கம்
4.1	கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்களின் திணைவாரியான பகுப்பாய்வு அட்டவணை	136
4.2	குறிஞ்சித் திணை சார்ந்த பாடல்கள்	139
4.3	குறிஞ்சித்திணைக்கான முதற்பொருள் பகுப்பாய்வு	139
4.4	நிலம்சார் முதற்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	141
4.5	பொழுதுசார் முதற்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	153
4.6	குறிஞ்சித்திணைக்கான கருப்பொருள் பட்டியல்	163
4.7	குறிஞ்சித்திணைக்கான கருப்பொருள் பகுப்பாய்வு	164
4.8	தெய்வம் சார்ந்த கருப்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	168
4.9	பறவைகள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	172
4.10	சுனை நீர், அருவி நீர் சார்ந்த கருப்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	183
4.11	உணவுப்பொருள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	188
4.12	குறிஞ்சித்திணைக்கான உரிப்பொருள் பகுப்பாய்வு	192

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.13	புணர்தலும் புணர்தல் நிமித்தமும் சார்ந்த உரிப்பொருளில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடல்கள்	197
4.15	முல்லைத் திணை சார்ந்த பாடல்கள்	215
4.16	முல்லைத்திணைக்கான முதற்பொருள் பகுப்பாய்வு	215
4.17	நிலம்சார் முதற்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	218
4.18	பொழுதுசார் முதற்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	224
4.19	முல்லைத்திணைக்கான கருப்பொருள் பட்டியல்	237
4.20	முல்லைத்திணைக்கான கருப்பொருள் பகுப்பாய்வு	238
4.21	தெய்வம் சார்ந்த கருப்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	239
4.22	மக்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	250
4.23	விலங்குகள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	253
4.24	பூக்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	256
4.25	முல்லைத்திணைக்கான உரிப்பொருள்	265
4.26	இருத்தலும் இருத்தல் நிமித்தமும் சார்ந்த உரிப்பொருளில் அமைந்த முல்லைத்திணைப் பாடல்கள்	266
4.27	முல்லைத் திணை சார்ந்த பாடல்கள்	277

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.28	மருதத்திணைக்கான முதற்பொருள் பகுப்பாய்வு	278
4.29	நிலம்சார் முதற்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	279
4.30	மருதத்திணைக்கான கருப்பொருள் பட்டியல்	288
4.31	மருதத் திணைக்கான கருப்பொருள் பகுப்பாய்வு	289
4.32	தெய்வம் சார்ந்த கருப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	290
4.33	மக்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	293
4.34	பறவை சார்ந்த கருப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	295
4.35	நீர்நிலைகள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	298
4.36	பூக்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	301
4.37	தொழில்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	313
4.38	மருதத்திணைக்கான உரிப்பொருள் பகுப்பாய்வு	314
4.39	ஊடலும் ஊடல் நிமித்தமும் சார்ந்த உரிப்பொருளில் அமைந்த மருதத்திணைப் பாடல்கள்	315
4.40	நெய்தல் திணை சார்ந்த பாடல்கள்	336
4.41	நெய்தல் திணைக்கான முதற்பொருள் பகுப்பு	337

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.42	நிலம்சார் முதற்பொருளில் அமைந்த நெய்தல் திணைப்பாடல்கள்	338
4.43	பொழுதுசார் முதற்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	354
4.44	நெய்தல் திணைக்கான கருப்பொருள் பட்டியல்	354
4.45	நெய்தல் திணைக்கான கருப்பொருள் பகுப்பாய்வு	356
4.46	மக்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	358
4.47	தொழில்கள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	359
4.48	உணவுப்பொருள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	362
4.49	நெய்தல் திணைக்கான உரிப்பொருள் பகுப்பாய்வு	363
4.50	இரங்கலும் இரங்கல் நிமித்தமும் சார்ந்த உரிப்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	364
4.51	பாலைத்திணை சார்ந்த பாடல்கள்	372
4.52	பாலைத்திணைக்கான முதற்பொருள் பகுப்பு	373
4.53	நிலம்சார் முதற்பொருளில் அமைந்த பாலைத்திணைப் பாடல்கள்	379
4.54	பொழுதுசார் முதற்பொருளில் அமைந்த பாலைத்திணைப் பாடல்கள்	382
4.55	பாலைத்திணைக்கான கருப்பொருள்	383

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.56	பாலைத்திணைக்கான கருப்பொருள் பகுப்பாய்வு	384
4.57	பறவைகள் சார்ந்த கருப்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	385
4.58	பாலைத்திணைக்கான உரிப்பொருள் பகுப்பு	389
4.59	பிரிதலும் பிரிதல் நிமித்தமும் சார்ந்த உரிப்பொருளில் அமைந்த நெய்தல் திணைப் பாடல்கள்	389

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குறிவரைவுப் பட்டியல்

குறிவரைவு எண்		பக்கம்
1.1.	ஆய்வுக் கட்டமைப்பு	70
1.2.	தொல்காப்பியர் வகுத்த அகத்திணைக் கோட்பாட்டுக் கட்டமைப்பு	132

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுருக்கக் குறியீட்டுப் பட்டியல்

அகத் -	அகத்திணை
அகம் -	அகநானூறு
ஐங் -	ஐங்குறுநூறு
கலி -	கலித்தொகை
குறள் -	திருக்குறள்
குறுந் -	குறுந்தொகை
கூத்தராற் -	கூத்தராற்றுப்படை
சிலம்பு -	சிலப்பதிகாரம்
தி.இ.பா.தொ -	திரை இசைப் பாடல் தொகுப்பு
தொல் -	தொல்காப்பியம்
தொல்.பொருள் -	தொல்காப்பியப் பொருளதிகாரம்
நம்பி.அகப் -	நம்பியகப்பொருள்
நற் -	நற்றிணை
நூ -	நூற்பா
ப -	பக்கம்
பட்டினப் -	பட்டினப்பாலை
பா -	பாடல்
பெரும்பாண் -	பெரும்பாணாற்றுப்படை
மதுரைக் -	மதுரைக்காஞ்சி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பின்னிணைப்புப் பட்டியல்

A பகுப்பாய்வுப் பாரம்

B ஆய்வு அறிக்கை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 1

அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.1 முன்னுரை

வேறெந்த உலக இலக்கியங்களிலும் காணவியலாத தனிச்சிறப்பு தமிழிலுள்ள அகப்பொருள் சார்ந்த இலக்கிய மரபாகும். சற்றேறத்தாழ 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் காணப்பெறும் அகப்பொருள் மரபு சங்க இலக்கியத்தில் பரவலாகவும் அதனைத் தொடர்ந்து வந்த இலக்கியங்களில் ஓரளவும் பின்பற்றப்பட்டுள்ளது. அவ்வாறு படைப்பிலக்கியங்களில் படிப்படியாகத் தொய்வுகண்டு காலவோட்டத்தில் அகப்பொருள் மரபு காலச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப பல்வேறு திரிபுகளுடனும் மாற்றங்களுடனும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அந்த வரிசையில், புத்திலக்கியங்கள் பரவலாகத் தோன்றி வளர்ந்து வரும் இக்காலக்கட்டத்தில் மக்கள் மனத்தை அதிகம் கவர்ந்துள்ள திரை இலக்கியத்தில், குறிப்பாகத் திரையிசைப்பாடல்களில் அகப்பொருள் மரபு பரவலாகப் பயின்று வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

இன்று திரையிலக்கியம் தமிழ்கூறு நல்லுலகத்தைத் தன்னகத்தே கட்டிப்போட்டு ஒட்டு மொத்த ரசிகனையும் ஒருங்கே சுண்டியிழுத்துத் தன் வசப்படுத்திக் கொண்டுள்ளது. திரைப்பாடல்களை இயற்றுவோர், கேட்போர் என்ணிக்கை நாளுக்கு நாள் ஏறுமுகமாகத்தான் இருக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் ஏதேனும் ஒரு புதுப்பாடல் இசைவானில் அரங்கேற்றம் காண்பது இதற்குச் சாட்சி. இந்த வளர்ச்சிக்கு ஈடாக திரையிலக்கியம் குறித்த ஆய்வுகளும் எழுதலே முழு வளர்ச்சிக்குச் சான்றாகும். பிறமொழிகளைப் போலல்லாது எழுத்து வாயிலாகவும் பேச்சு வாயிலாகவும் மொழியையும் பண்பாட்டையும் காத்து உலக மாந்தனுக்கு நாகரிகம் கற்றுத் தந்த தமிழினம் மரபு மாறாமலும் அதன் வழக்கொழியாமலும் இலக்கிய நயத்தையும் காத்து வரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.2 ஆய்வுப் பின்னணி

உலக மக்கள் அனைவரையும் கவர்ந்துள்ள ஒரு கலை உண்டென்றால் அது திரைப்படக் கலை எனலாம். அறிவியல் தந்த பெருநன்மைகளுள் தலைசிறந்த ஒன்றாக விளங்குவது திரைப்படம். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கை ஆகிய மக்கள் தொடர்பு சாதனங்கள் மக்களை நாடிச் செல்கின்றன. ஆனால்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மக்கள் தாமே நாடிவரும் துறை திரைப்படத் துறையாகும் என்கிறார் நல்லத்தம்பி(1990).

திரைப்படத்தின் சிறப்பியல்பு பற்றிக் குறிப்பிடும் அறிஞர்கள் அதை மிகப்பெரும் சக்தியாகவே கணிக்கிறார்கள். மக்களின் மனத்தில் மிக ஆழமான பாதிப்பை ஏற்படுத்துவதில் வேறு எந்தக் கலைக்கும் திரைப்படத்தைப் போன்றதொரு சக்தி கிடையாது என்பார் பேல பெலாஸ்(1992). திரைப்படத்தின் வலிமையை உணர்ந்ததால்தான், “நான்கு படங்களைத் தணிக்கை செய்யாமல் அனுமதித்தால் போதும் திராவிட நாட்டை வாங்கிவிடுவேன்’ என்று பேரறிஞர் அண்ணா கூறியதாக அறந்தை நாராயணன்(1981) சுட்டிக்காட்டுகிறார்.

திரைப்படத்தினால் விளைந்த நன்மைகள் பலவாகும். நம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து படைக்கும் ஒப்பற்ற சாதனமாக விளங்கும் திரைப்படம் சாதி, மதம், வயது பாராமல் அனைவரையும் தம் பக்கம் ஈர்த்து வந்துள்ளது என்று அழகேசனும்(1999) சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினரும் வேற்றுமை இல்லாது ஓரிடத்தில் கூடி அமரும் சூழலை ஏற்படுத்தி சமத்துவத்திற்கு வழி அமைத்திருக்கிறது என்று செல்வமும்(1995) திரையிலக்கியம் உலகத்தின் ஒரு மூலையை இன்னோர் மூலையோடு இணைக்கிறது என்று சுப்பிரமணியனும்(1990) கூறுவது இங்கே கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியனவாகும். ஆகவேதான் பெரியவர்-சிறியவர், ஆண்கள்-பெண்கள், படித்தவர்-படிக்காதவர் என்ற பேதம் கடந்து அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கே கவரும் திரைப்படத்தை உலகப் பொதுமொழி என்று கூற முனைந்தார் விஸ்வநாதன்(1992).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திரைப்படம் என்று தமிழுலகில் அழைக்கப்படும் திரைப்படக் கலையானது தமிழ் மக்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்ததாகும். தமிழர்களின் தற்கால அரசியல், சமூகம், பண்பாடு ஆகியவற்றில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவதாகும். அதே நேரம் திரைப்படம் என்பது ஒரு தொழில் என்கிற வகையிலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது ஒரே நேரத்தில் கலையாகவும் தொழிலாகவும் திகழக்கூடிய கலைத்தொழில் சாதனமாகும்.

இத்தகைய திரைப்படத்தின் கதைகள் தமிழில் பாடல், ஆடல், சண்டை, நகைச்சுவை தவிர்த்த மீதமுள்ள ஒரு மணி நேரத்துக்குள் தான் காதல், குடும்பம், பாசம், சோகம், கிராமம், நகரம், பக்தி, பேய், சமூகம், அரசியல், பண்பாடு, கலை போன்றவற்றை வெளிப்படுத்தும் தன்மையுள்ள படத்தின் கதைகள் கூறப்படுகின்றன. பாடல், ஆடல், சண்டை, நகைச்சுவை போன்ற தன்மைகளுடன் இணைந்த தமிழ்த்திரைப்படம் அடிப்படையில் கேளிக்கை மதிப்புக் கொண்டதாகவே பலரால் நோக்கப்படுகின்றது. அரசு கூட, திரைப்படத்திற்குக் கேளிக்கை வரியே விதிக்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆனால், திரைப்படத்தின் சமூகத் தாக்கம் கேளிக்கை என்பதைத் தாண்டியதாகவும் உள்ளது. கேளிக்கை என்ற நோக்கில் அல்லது கேளிக்கை காட்டிப் பணம் சம்பாதிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுப் படமெடுக்கப்படும் கதைகளின் மூலம் திரையிலக்கியம் என்கிற கலைவடிவத்தின் சமூகத் தாக்கம் மிகுந்த அளவு நிகழ்த்தப்படுகிறது. அவற்றின் மூலமும் பலவிதமான சமூகக் கண்ணோட்டங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, திரையிலக்கியங்களை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வதென்பது அதன் கலை இலக்கியத் தன்மையைத் தாண்டித் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வாகவும் உள்ளது (இரவிக்குமார்,சு.2007).

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த தமிழ்க்கவிதை தனது வளர்ச்சிப் படியில் பல மாற்றங்களையும் ஏற்றங்களையும் கண்டுவருகிறது. இருபதாம் நூற்றாண்டுவரை யாப்புக்கு அடிபணிந்த கவிஞர்கள் அதன் பின் மரபில் இருந்து விலகியும் மீறியும் புதுக்கவிதைகளைப் புனையத் தொடங்கினர். அதன் தொடர்ச்சியாய்ப் பல்வேறு வடிவ மாற்றங்களைத் தமிழ்க்கவிதை பெற்றுள்ளது.

அந்த வரிசையில், இன்று படித்தவர் முதல் பாமரர் வரை அனைத்துத் தமிழ்நெஞ்சங்களின் கவனமும் திரையிசைப்பாடல்களின் பக்கம் புலம் பெயர்ந்துள்ளது. தமிழில் பேசும் படம் தொடங்கிய 1931-ஆம் ஆண்டில் அரும்பு விடத் தொடங்கிய திரையிசை இலக்கியம் காலவோட்டத்தில் ஏற்பட்ட திரைமோகத்தாலும் மாபெறும் கவிஞர்களின் வருகையாலும் அசுர வளர்ச்சி காணத் தொடங்கியது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடக்கக் காலத்தில் திரையிசைப் பயிரை விதைத்தவர்கள் மதுர.பாஸ்கரதாஸ், பாபநாசம் சிவன், உடுமலை நாராயணகவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கா.மு.ஷெரிப் ஆகியோர் என்றாலும் தொடர்ந்து அதற்கு உரமிட்டு வளம் சேர்த்தவர்கள் கன்னதாசன், வாலி, முத்துலிங்கம், வைரமுத்து, அறிவுமதி போன்றோரே ஆவர். இந்த மாபெறும் கவிஞர்களின் அருமுயற்சி தமிழ்த் திரையிசைப்பாடல்களின் வளர்ச்சிக்கு மேலும் வலுசேர்த்தது. அதன்பின் இன்று வரை யுகபாரதி, சிநேகன், பழனிபாரதி, தாமரை, நா.முத்துக்குமார், மதன் கார்க்கி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கபிலன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பாடலாசிரியர்கள் தோன்றி பல்லாயிரக்கணக்கான திரையிசைப்பாடல்களை இயற்றித் தமிழ்த் திரையிசைப் பூங்காவை நறுமணம் கமழச் செய்து வருகிறார்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்றைய காலக்கட்டத்தைத் திரையிலக்கியத்தின் பொற்காலம் எனலாம். அந்த அளவிற்குப் புதுப்புது பாடலாசிரியர்களின் எண்ணிக்கையில் ஏற்றமும் திரைப்படப் பாடல்களின் போக்கில் மாற்றமும் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. இருந்த போதிலும், தொன்று தொட்டு மரபு வழி வந்த கவிஞர்களுக்கும் அவர்களின் படைப்புகளுக்கும் ஈடான வளர்ச்சியை இக்காலக் கவிஞர்களிடையே காண இயலவில்லை என்ற குற்றச்சாட்டு தமிழ் இலக்கிய வானில் அவ்வப்போது அசரீரியாய் ஒலித்துக் கொண்டேதான் இருக்கிறது. அக்குற்றச்சாட்டை மறுக்க முடியாவிட்டாலும், அதனை அப்படியே ஏற்று ஒருதலைப்பட்சமாய் இருந்து புதிய வரவுகளை நாம் ஒரேயடியாக ஒதுக்கிவிடவோ ஓரங்கட்டவோ கூடாது; முடியாது.

எப்படி மரபு வேலியைத் தகர்த்தெறிந்து புதுக்கவிதை புதுநடை போடத் தொடங்கியதோ, அதுபோலவே புதுக்கவிதையின் மீட்சியாக இன்று திரையிசைப்பாடல்கள் இலக்கியத் தேரை இழுத்துச் செல்லத் தொடங்கிவிட்டன. கால ஓட்டத்திற்கு ஏற்ப மனிதனின் போக்கும் நோக்கும் மாறிக்கொண்டே வருவது உலக இயல்பு. இதே நிலை படைப்பிலக்கிய வாதிகளிடமும் மலிந்தே காணப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கிய வானில், திரைப்பாடல் ஆசிரியர்களே சிறகடித்துப் பறக்கும் ஒரு சூழல் இன்று நிலவுகிறது. பிற இலக்கிய வடிவங்களை விட படைப்பதற்கு எளிமையாகவும் இலகுவாகவும் இருப்பது ஒரு காரணமாக இருக்க, சொல்ல வந்த செய்தியை நினைத்த மாத்திரத்தில் சுருக்கமாகவும் தெளிவாகவும் அதே வேளையில் யாப்பமைதியின்றி வடிக்கவும் கேட்போர் மனத்தில் உடனே பதியும் அளவிற்கு ஏற்புடைய வடிவமாகவும் அமைந்திருப்பதால் திரையிசைப்பாடல்களே அனைத்துச் சாரார் இடையிலும் இன்றைய முதன்மைத் தேர்வாக உள்ளது.

1.3 ஆய்வுச் சிக்கல்

இன்றைய நிலையில், பலரது கூட்டு முயற்சியால் திரையிலக்கியப் பயிர் உலகெங்கும் பன்முகங்கொண்டு வளர்வது நிதர்சன உண்மையாகும். இவ்வாறாகப் பயணம் செய்து கொண்டிருக்கும் திரையிசை இலக்கியத்தை யாரும் எதையும் எங்கும் எப்படியும் எழுதலாம் என்ற சுதந்திரமான மெத்தனப் போக்கும் சிலரின் திரைப்பாடல் ஈடுபாட்டிற்குப் பாலம் அமைத்துத் தருவது வருத்தத்திற்கும் வாதத்திற்கும் உரிய ஒன்றாகிவிட்டது. இதன் விளைவாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் திரையிலக்கியம் மீதும் பாடலாசிரியர்கள் மீதும் குவிந்த வண்ணமே உள்ளன. இந்தச் சிக்கலை ஆய்ந்தறிந்து நுட்பமாக அணுகி, நுணுக்கமாக அலசி, நூதனமாக ஆராய்ந்து களைய வேண்டிய கடப்பாடு தமிழிலக்கிய ஆர்வலர்களுக்கும் அறிஞர் பெருமக்களுக்கும் குறிப்பாக ஆய்வாளர்களுக்கும் உண்டு.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இக்காலத் தமிழ் இலக்கியத்தில் மிகப்பல போக்குகள் ஒரே காலத்தில் நிலவுகின்றன. 'படைப்பு', 'இலக்கியம்' முதலிய மதிப்பார்ந்த சொற்களைப் பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. தர வேறுபாடுகளைக் கருதாத நிலையில் எல்லாவற்றையும் எழுத்துக்கள் எனக் குறிப்பிடத் தொடங்கினர். எழுத்துக்களை ஆழமான வாசிப்புக்குரியவை, வெகுமக்கள் வாசிப்புக்குரியவை எனப் பகுக்கும் நிலை ஏற்பட்டது. முந்தியவையே இலக்கியம், பிந்தியவை இலக்கியமன்று என்ற எண்ணமும் நிலவத் தொடங்கியது.

வெகுமக்கள் ஊடகங்களாகிய இதழ்கள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி ஆகியன சார்ந்த எழுத்துக்கள் வணிக எழுத்துக்கள் என்றும் இவை இலக்கிய மதிப்பற்றவை என்றும் கருதப்பட்டன. தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்த அளவில் பிறவற்றை விட திரைப்படத்தின் செல்வாக்கு மிகுதியாகும். இதனைச் சனநாயக மயப்படுதலின் ஒரு பகுதியாக உடன்பாட்டு நிலையில் இனங்காண முடியும் எனும் கா.சிவத்தம்பியின்(1993) திரையிலக்கியம் குறித்த கண்ணோட்டம் இங்குச் சிந்திக்கற்பாலது.

'திரைப்படம் நம்மிடையே ஒரு வன்மையான தொடர்பு சாதனமாக இயங்கி வந்துள்ளது. அதிலே பயன்படுத்தப்பெறும் மொழிநடையும் பாடல்களும் மிகுந்த இலக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இன்னொரு கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது திரைப்பட, செய்தித்தாள் தமிழ் நடையானது தமிழைச் சனநாயக மயப்படுத்துவதிலே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது' (சிவத்தம்பி,க.1993:ப.103)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1930-களில் பேசும்படங்கள் வெளிவரத் தொடங்கிய பொழுது, வேறுபட்ட சமூகப் படிநிலைகளில் இருந்தோரும் எழுத்தறிவு இல்லாதோரும் கூட திரைப்பட அவையினர் ஆவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதே காலக்கட்டத்தில்தான் இந்திய விடுதலை இயக்கம் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் தலைமையில் வெகுமக்கள் இயக்கமாயிற்று. மக்களாட்சி உணர்வுகள் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இந்திய விடுதலைக்குப் பின்னர் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை எனும் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. திரைப்படங்கள், அரசியல் கருத்துத் தொடர்பு ஊடகங்களாகவும் செயல்பட்டன(Sivathamby.K,1981). அதன் பயனாகத் திரைப்பட நடிகர்கள், உரையாடல் - பாடல் ஆசிரியர்கள் ஆகியோர் சமூக, அரசியல் வாழ்விலும் செல்வாக்குப் பெற்றனர்.

இதனால் மரபார்ந்த தமிழ்ப் புலமைத் துறையினரும் எழுத்துக்கள் வணிகமயமாதலைக் கடுமையாக எதிர்த்த நவீன இலக்கிய ஈடுபாட்டாளர்களும் திரைப்படம் சார்ந்த எழுத்துக்களை இலக்கியமாக ஏற்க மறுத்தனர். இருந்தாலும், இலக்கியத்தைச் சமூகவியல் நோக்கில் அணுக முற்படுவோர் திரைப்படங்களை, அதிலும் குறிப்பாகத் திரைப்பாடல்களை இலக்கியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்வது தவிர்க்க இயலாததாயிற்று.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதை வலியுறுத்த முற்பட்ட க.ப.அறவாணன்(1991), ‘திரைக்கவிதை, கவிதை ஆராய்ச்சியில் ஒதுக்கத்தக்கது அன்று. கவிதை ஆராய்ச்சியில் இடம்பெறத்தக்க அளவிற்குத் திரைக்கவிதையிலும் கவிதை அழகு இருக்கிறது ; கவிதைக் கூறுகள் உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாகச் சமூகத்தைக் குணப்படுத்த வேண்டிய கருத்து வீச்சுகள் நிரம்பியுள்ளன. ‘ஆடியன்ஸ்’ அடிப்படையில் ஆராயும்போது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திரைக்கவிதையின் 'ஆடியன்ஸ்' சாதி, மதம் கடந்தது. ஏனைய கவிதை பாதிக்கும் பரப்பைவிடத் திரைக்கவிதை பாதிக்கும் கேள்விப் பரப்பு பெரியது; மிகப்பெரியது'(அறவாணன்,க.ப.1991:ப.295) என்று பகர்கிறார். மேற்கண்ட கூற்றின் வழி, திரைப்பாடல்களும் இலக்கியத் தரத்தினவே என்று க.ப.அறவாணன் கட்டியம் கூறுவது புலனாகிறது.

திரையிசைப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களைப் போலவே பாடுவதற்கும் ரசிப்பதற்கும் எளிமையானவை. மரபிசையைப் போலன்றி அவ்வப்போது நிகழும் மாற்றங்களை ஏற்று வளர்ந்துகொண்டே இருப்பவை எனத் தியடோர் பாஸ்கரன்(1998) குறிப்பிடுவதிலிருந்தும், ஏனைய கவிதைகளைப் போலவே திரையிசைப் பாடல்களில் கவிதை அழகும் கவிதைக் கூறுகளும் உள்ளன; சமூகத்தைக் குணப்படுத்த வேண்டிய வீச்சுகள் நிரம்பியுள்ளன; ஏனைய கவிதைகள் ஏற்படுத்தும் பாதிப்பைவிடத் திரையிசைப் பாடல்கள் ஏற்படுத்தும் பாதிப்பு பெரியதாகும் என்று க.ப.அறவாணன்(1991) கூறுவதன் மூலமும், கவிதை படித்தவர்களை மட்டுமே சென்றடைகிறது; ஆனால் பாடல்கள் படித்தவர், படிக்காதவர் என அத்தனை பேராலும் விரும்பப்படுகிறது எனக் கவிஞர் வைரமுத்து(1998) சுட்டுவதன் வாயிலாகவும் கடினமான இலக்கியங்களையும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத தத்துவக் கருத்துகளையும் வாழ்வியல் சிக்கல்களையும் தீர்வுகளையும் கூட எளிய நடையில் இனிமையாய்ப் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் திரையிசைப் பாடல்கள் உதவுகின்றன என்பது மாற்றுக் கருத்தின்றி புலனாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனவே, திரையிசைப் பாடல்களையும் இலக்கியம் எனக் கூறலாம் என்று சேயோனும்(1993), திரைப்பாடல்களை இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே ஏற்றுக்கொள்வது தவிர்க்க இயலாது என்று செந்தில்குமாரும்(1998) குறிப்பிடுவது இங்கே சாலப் பொருந்தும்.

இக்காலத்தில் ஒருவர் எத்தனை இலக்கியம் படைத்திருப்பினும் மக்களிடையே திரையிசைப் பாடலாசிரியர்களைப் போல செல்வாக்குப் பெற முடிவதில்லை என்று கண்ணதாசனின் திரைப்பாடல்களை ஆராய்ந்த இராமலிங்கம்(1995) குறிப்பிடுகின்றார். இதே கருத்தை வலியுறுத்த முற்பட்ட கவிஞர் மேத்தா(1982), 'போகிற போக்கைப் பார்த்தால் சினிமாவுக்குப் பாட்டு எழுதாதவர்களைக் கவிஞன் என்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறது' என வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்த் திரைப்படப் பாடல்கள் குறித்து இயக்குநர் பாரதிராஜா(1996) கூறுவது இக்கருத்துக்கு மேலும் வலு சேர்ப்பதாகவும் முற்றிலும் பொருத்தமானதாகவும் உள்ளது. 'திரைப்படங்கள் சமூக அந்தஸ்தைப் பெறுவதையும் திரைப்பாடல்கள் இலக்கிய அந்தஸ்தைப் பெறுவதையும் எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது. திரைப்பாடல்களை நான்காம் தர வடிவமென்று நக்கல் செய்தவர்கள் கூட அது ஒரு சரியான வாகனம் என்பதை ஓரளவுக்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்' (சண்முகசுந்தரம்,சு.1996:ப3)

திரைப்படங்களையும் நடிகர்களையும் பாடலாசிரியர்களையும் ஒரு காலத்தில் சாதாரணமாக எண்ணியவர்களும் உண்டு. ஆனால், இன்று நடிப்புக்காகக் கல்லூரி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சிறந்த படங்களுக்கு விருது, பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களிலும் ஆய்வுப் பொருள்களிலும் திரையிசைப்பாடல்கள் எனத் திரையிலக்கியத்தின் மதிப்பு கூடிக்கொண்டே வருகிறது.

திரையிசைப் பாடல்கள் பொழுது போக்கிற்காக மட்டுமல்லாமல் கலை இலக்கிய மதிப்புடையனவாகவும் சமுதாயத் தாக்கத்தை ஏற்படுத்துவனவாகவும் இருப்பதனால் அதனைப் பாமரருக்கும் வளமான கருத்தைச் சுகமாகச் சுமந்து செல்லும் வலுவான வாகனம் என்கிறார் சோதி(1996).

திரையிசைப்பாடல்கள் இன்புறுத்தல், அறிவுறுத்தல் ஆகிய இரு பணிகளைச் செய்கின்றன மனித மனத்திற்கு மகிழ்வையும் மனநிறைவினையும் பாடல்கள் அளிக்கின்றன எனவே, சமுதாய உணர்வுகளைத் தூண்டும் செயலைத் திரையிசைப் பாடல்கள் மிக எளிமையாகச் செய்கின்றன என்பதை இதன்வழி அறியலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் இலக்கியங்களின் கருத்தாழங்களையும் அவற்றின் நுணுக்கங்களையும் நன்கு கற்றுணர்ந்தவர்களே காலந்தோறும் கவிஞர்களாக வலம் வருகின்றனர். சங்கப் புலவர்கள், சங்க இலக்கியங்களில் அன்றைய கால மக்களின் அகவாழ்க்கை உணர்வுகளையும், வாழ்க்கை நெறிகளையும் எடுத்துரைக்கும்போது தங்களைச் சார்ந்து வாழும் உயிரினங்களின் வாழ்வு முறையையும், உணர்வுகளையும் குறிப்பிட்டு விளக்குகின்றனர்.

அதைப்போல, தற்காலச் சமூக வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டித் திரைப்பாடல்களை யாத்துள்ள கவிஞர்கள் முன்னைய இலக்கியங்களின் கூறுகளையும் மரபுவழிச் சிந்தனையையும் தத்தம் படைப்புகளில் பதிவு செய்வது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல்பாகிவிட்டது. ஓர் இலக்கியத்தின் வரலாற்றை நோக்கினால் அவ்விலக்கியம் முன்னைய இலக்கியத்தின் தொடர்பைப் பெற்றிருக்கும் என்று கூற விழைந்த மு.வரதராசனாரின்(1979) கூற்று மரபுவழி இலக்கியத்தின் போக்கை நன்கு எடுத்தியம்புகிறது:

மனிதன் ஓர் ஊரிலிருந்தேனும் நாட்டிலிருந்தேனும் வேறோர் ஊருக்கும் வேறோரு நாட்டிற்கும் சென்று வர நேர்ந்தால், பழைய ஊர்த்தொடர்பையும் நாட்டுத் தொடர்பையும் மறப்பதில்லை. அந்த நினைவுகளுடனே புதிய இடத்து வாழ்வை நடத்துகிறான். மனிதன் படைக்கும் இலக்கியமும் காலத்திற்கு ஏற்ப புதிய வடிவங்களைப் பெற்றபோதிலும் பழைய இலக்கியங்களின் தொடர்பையும் அடிப்படையையும் விடுவதில்லை. அவற்றையே இலக்கிய மரபு என்று கூறுதல் வழக்கம். இலக்கியத்தின் வரலாற்றை ஆராய்ந்தால் பழைய இலக்கியத்தின் செல்வாக்கு, மரபு என்ற பெயரால் இருந்து வருதலைக் காணலாம். புதிய இலக்கியங்கள் ஏற்பட, பழைய இலக்கிய மரபுகளின் செல்வாக்கு மெல்ல மெல்ல குறைந்து வருமே தவிர அடியோடு நீங்கி விடுதல் இல்லை. புதிய இலக்கியங்கள் பழைய இலக்கியங்களின் மரபுகளை ஒட்டியும் காலத்திற்கேற்ப அமைந்தும் வருதல் உண்டு.(வரதராசன்,மு.1979:ப.23)

எனவே, புதிதாக உருவாகும் இலக்கியங்கள் முன்னைய இலக்கியங்களின் மரபைப் பெற்றுத் திகழ்வது மறுக்க முடியாத ஒன்றாகிவிட்டது. இன்னும் சொல்லப் போனால், தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொப்புள் கொடி உறவு போல மரபின் தாக்கம் திகழ்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆகவே, தொல்காப்பியர் தொகுத்த அகத்திணை மரபும் இதே நிலையில் தற்காலச் சூழலில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ள திரையிலக்கியத்தில் விரவிவருகின்ற உண்மையை மறுக்கவியலாது என்பது ஆய்வாளரின் நம்பிக்கையாகும். இதன் வழி, திரைப்பாடல்கள் இலக்கியத் துறையினரால் ஆராய்வதற்குரிய தகுதியைப் பெற்றுள்ளன என்பது உறுதி செய்யப்படுகிறது.

பேசும் படம் பிறந்த அதே 1931-ஆம் ஆண்டில் பிறந்தவர் தான் கவிஞர் வாலி. தொடங்கிய காலம் தொட்டு அவரைப் பற்றிப் பேசாத திரையிலக்கிய ரசிகர்கள் இல்லாத அளவுக்கும் திரைப்படத் துறையின் **‘மார்க்கண்டேயன்’** என்று சொல்லும் அளவுக்கும் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து திரையிசைப்பாடல்களை யாத்து ஓய்ந்த மாபெரும் கவிஞராவார். மரபுகவிதை**,** புதுக்கவிதை இரண்டையும் மதிக்கும் வாலி**, ‘**நான் மரபை வணங்கிப் புதிதைப் போற்றுபவன்**’** என்று தம்மைப் பற்றிக் குறிப்பிடுகிறார்(வாலி**,**1995). அத்தகைய ஆற்றலும் திறமையும் மிக்க கவிஞர் வாலியின் பாடல்களில் இலக்கியச் செல்வாக்கு மிகுந்த அகமரபு கூறுகள் நிச்சயம் பரவியும் விரவியும் இருக்கும் என்ற ஆய்வுச் சிக்கலின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.4 ஆய்வு நோக்கம்

‘கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்களில் அகத்திணை மரபு’ என்னும் தலைப்பிலான இவ்வாய்வு கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது :

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

i. கவிஞர் வாலியின் தமிழ்த்திரையிசைப் பாடல்களில் வெளிப்படும் அகத்திணை மரபுகளை அடையாளங்காணுதல்

ii. கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்களில் விரவியுள்ள அகத்திணை மரபுகளை முதல், கரு, உரிப்பொருள்களின் அடிப்படையில் திணை வாரியாகப் பகுத்தாய்தல்

iii. கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்களில் மிளிரும் அக இலக்கியச் செல்வாக்கை மதிப்பிடுதல்

1.5 ஆய்வு வினா

i. கவிஞர் வாலி இயற்றிய தமிழ்த்திரையிசைப் பாடல்களில் காணப்படும் அகத்திணை மரபுகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ii. கவிஞர் வாலி இயற்றிய தமிழ்த்திரையிசைப் பாடல்களில் விரவியுள்ள அகத்திணை மரபுகளை எவ்வாறு திணை வகுப்பது?

iii. கவிஞர் வாலியின் திரையிசைப்பாடல்கள் எந்த அளவிற்கு அக இலக்கியச் செல்வாக்கைப் பெற்றுள்ளன?

1.6 ஆய்வுப் பயன்

திரைப்பாடல்கள் குறித்த இளங்கலை, முதுகலை, முனைவர் பட்ட ஆய்வுகள் இதுவரை மலேசிய மண்ணில் எழாத நிலையில் தமிழகத்தில் பலரும் இத்துறையில் முனைப்புக் காட்டியுள்ளது ஆய்வில் தெரிய வந்துள்ளது. எனினும், ஆய்வாளரின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நுண்ணோக்கல் வழி தமிழ்த் திரையிசைப்பாடல்கள் மீது தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாட்டு அணுகுமுறையில் இதுவரை எந்தவொரு ஆய்வும் நிகழ்த்தப்படாதது திட்டவட்டமாகத் தெரிய வந்துள்ளது. அவ்வகையில், இந்த ஆய்வு திரையிசைப்பாடல் இயற்றும் கவிஞர்களுக்கு ஓர் வழிகாட்டுதலாகவும், திரையிலக்கியத்தைப் பற்றியிழுத்துச் செல்லும் பாடலாசிரியர்களுக்கு மரபுவழிச் சிந்தனையை நினைவூட்டும் ஒரு கருவியாகவும், கவிஞர் வாலியின் கவிபாடும் சிந்தனை ஆற்றலை வெளிக்கொணரும் ஓர் ஆவணமாகவும் திகழும். மேலும், உலகின் முதல் இலக்கியக் கோட்பாடாகத் திகழ்வது தொல்காப்பியர் வகுத்த அகத்திணைக் கோட்பாடே என்ற உண்மையை நிறுவி அதனை இலக்கிய உலகத்திற்கு எடுத்து இயம்பவும், இனிவரும் தமிழ்த்திரையிசைப் பாடலாசிரியர்கள் தத்தம் படைப்பை இலக்கியத் தகுதிக்கு உயர்த்திக்கொள்ள நல்லதோர் அளவுகோலாகவும், திரையிசைப்பாடல்களைக் கேட்போர் மத்தியில் ரசிக்குந்திறனை மேம்படுத்தவும், திரையிலக்கியம் குறித்த தொடர் ஆய்வுகளுக்குப் பரிந்துரை செய்யவும் நிச்சயம் பயனளிக்கும் என்பது ஆய்வாளரின் நம்பிக்கையாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.7 ஆய்வு எல்லை

தமிழ்த்திரையிசைப் பாடல்களின் எல்லை மிகப் பரந்து விரிந்தது. பாடலாசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். எனவே, ஆய்வின் வரையறையைக் கருத்தில் கொண்டு நீண்ட காலம் திரையுலகில் பயணித்தவரும் உலகின் எந்தப் பாடலாசிரியரும் எட்டாத என்னிக்கையில் பாடல் யாத்தவரும், நான்கு தலைமுறை நடிகர்களுக்குப் பாட்டெழுதியவருமான கவிஞர் வாலி இந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்விற்குப் பாட்டுடைத் தலைவனாக அமைகின்றார். காவியக் கவிஞராகவும் வாலிபக் கவிஞராகவும் போற்றப்படும் கவிஞர் வாலி, அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கிட்ட தட்ட 10,000 தமிழ்த் திரையிசைப்பாடல்களை இயற்றியுள்ளார்.

அவருடைய திரையிசைப்பாடல்கள் சிறு சிறு நூல் வடிவில் பாடல் தொகுப்புகளாக வெளியிடப்பட்டுள்ள போதிலும், ஆய்வின் அவசியம் கருதி அவருடைய மாபெரும் வெளியீடாகத் திகழும் வாலி 1000 பாடல் தொகுதி இந்த ஆய்வுக்கு எல்லையாக அமைகின்றது. 500 பாடல்கள் வீதம் இரண்டு தொகுதிகளை உள்ளடக்கிய *வாலி 1000 திரையிசைப்பாடல்* தொகுப்பிலுள்ள 1000 பாடல்களும் இவ்வாய்வில் அலசி ஆராயப்பட்டுள்ளன.

அதே வேளையில், கவிஞர் வாலியின் திரையிசைப்பாடல்களில் மிளிரும் அகத்திணை மரபுகள் ஆய்வின் கோட்பாடாக அமைவதால், தமிழில் நமக்குக் கிடைத்துள்ள தொன்மையான நூலான தொல்காப்பியர் வகுத்த தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள அகத்திணை மரபுகளும் இவ்வாய்வுக்கு எல்லையாக அமைகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.8 ஆய்வுச் சான்றாதாரங்கள்

கவிஞர் வாலியின் தமிழ்த் திரையிசைப்பாடல்களில் அகத்திணை மரபு என்னும் இவ்வாய்விற்கு உசாத்துணையாகத் தகுந்த முதன்மைச் சான்றாதாரங்களும் துணைமைச் சான்றாதாரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.8.1 முதன்மைச் சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்குக் களமாக அமைகின்ற கவிஞர் வாலியின் திரையிசைப்பாடல்கள் தொகுப்பான *வாலி 1000 திரையிசைப் பாடல்கள் தொகுதியும்* (தொகுதி 1 & 2) தொல்காப்பியர் தொகுத்த *தொல்காப்பியப் பொருளதிகார மூலமும்* அவற்றிற்கான *உரைகளும்* ஆய்வின் முதன்மைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

1.8.2 துணைமைச் சான்றாதாரங்கள்

கவிஞர் வாலியின் படைப்புகள் குறித்தும் தொல்காப்பியம் குறித்தும் திரையிலக்கியம் குறித்தும் எழுந்த ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், நூல்கள், பாடல் தொகுப்புகள், ஆய்வேடுகள், இதழ்கள், ஆகியன இவ்வாய்வுக்குத் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9 கருச்சொற்கள்

'கவிஞர் வாலியின் தமிழ்த் திரையிசைப் பாடல்களில் அகத்திணை மரபு' என்னும் இவ்வாய்வில் தமிழ்த் திரையிசைப்பாடல்கள், கவிஞர் வாலி, அகத்திணை மரபு ஆகியன ஆய்வுக்குரிய முக்கியக் கருச்சொற்களாக அமைகின்றன.

1.9.1 தமிழ்த் திரையிசைப்பாடல்கள்

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் உள்ளடங்கிய கலை வடிவம் திரைப்படம் ஆகும். திரைப்படக்கலை தோன்றுவதற்கு முன்னர் நாடகக்கலை சிறப்புற்று

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விளங்கியது. திரைப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் திரைப்படம் நாடகத்தை விடச் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. நாகரிகம் பெற்றெடுத்த நாகரிகக் குழந்தையாகவே திரைப்படம் விளங்கியது(மரியசெல்வம்,பி.1989).

மௌனப் படங்கள் பேசும் படங்களாக வளர்ச்சியடைந்த பொழுது, அப்படங்களில் வசனமும் பாடல்களும் முக்கிய இடத்தை வகித்தன. பொதுவாகத் தமிழ்த் திரைப்படங்கள் தமிழ் மேடை நாடகங்களை ஒத்ததாகவே அமைக்கப்பட்டு வந்த சூழலில் பாடல்களும் படங்களும் பிரிக்கமுடியாத இரட்டைக் குழந்தைகளாகவே வளர்ந்து வந்தன. ஊமைப்படங்கள் பேச ஆரம்பித்தபோது, அவை பேசுவதில் காட்டியதைவிட பாடுவதில்தான் அதிக அக்கறை காட்டியதாகத் தெரிகிறது என்கிறார் சண்முகசுந்தரம்(1996).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தியாகராஜ பாகவதர் காலத்திலும் அதற்கு முன்பும் கூட இசைக்காகவே பல படங்கள் எடுக்கப்பட்டு அவை மக்களின் பேராதரவைப் பெற்றன என்பது தமிழ்த் திரைப்பட உலகம் அறிந்த செய்தியாகும். அக்காலத் தமிழ்த் திரைப்படங்களில் சராசரியாக 50 பாடல்கள் கூட இருந்தன என்று முக்தா சீனிவாசன்(1997) குறிப்பிடுகிறார்.

திரையிசைப் பாடல்கள் திருந்தாத பலரைத் திருத்தியிருக்கின்றன; நெறிப்படுத்தியிருக்கின்றன; மனம் தளர்ந்தவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியிருக்கின்றன. கவிஞர் வாலி திரைப்படத் துறையில் பாட்டெழுத நுழைந்த காலத்தில், சரியான வாய்ப்புகள் தொடர்ந்து வராததால் மனம் தளர்ந்திருந்தார். அப்போது ‘சுமைதாங்கி’ படத்தில் இடம்பெற்ற கவியரசு கண்ணதாசனின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

'மயக்கமா? கலக்கமா?' என்னும் பாடல்தான் வாழ்க்கையை எதிர்த்துப் போராடுவதற்கான வலிமையைத் தமக்குத் தந்ததாகக் குறிப்பிடுகின்றார்(வாலி,1995). மேலும், 'பாவமன்னிப்பு' திரையில் இடம்பெற்ற 'சிலர் சிரிப்பார், சிலர் அழுவார்' என்று தொடங்கும் பாடலில் வரும் 'காலம் ஒருநாள் மாறும், நம் கவலைகள் யாவும் தீரும்' என்ற அடி தமக்குள் நம்பிக்கையை விதைத்து ஆறுதல் படுத்தி திரைத்துறையில் ஓரளவு பெயர் பெறுவதற்குக் காரணமாக இருந்தது என்கிறார் வாலி(முத்துலிங்கம்,1998).

திரைப்படத்தின் முக்கியமான கூறு பாடல் ஆகும். தொன்றுதொட்டே தமிழர்களின் கலை, பண்பாடு முதலியவை பாடல்களுக்கு முதலிடம் வழங்கி வந்துள்ளன. தமிழர்களின் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை, தாலாட்டு முதல் ஒப்பாரி வரையான பாடல்கள் இரண்டறக் கலந்து விளங்கக் காணலாம். இன்று உலகின் தலைசிறந்த கலை வடிவமாகத் திகழும் திரைப்படங்களில், அதிலும் குறிப்பாக இந்தியத் திரைப்படங்களில் பாடல்கள் தவிர்க்க இயலாத உறுப்பாக விளங்குவதைக் காணலாம். இவற்றுள் தமிழ்த் திரைப்படங்கள் பாடல் பதிவுடன் தொடங்குவதும் திரைப்படம் வெளிவரும் முன்பாகப் பாடல்கள் வெளியிடப்படுவதும் திரையிசைப் பாடல்களின் முதன்மையையும் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றன.

தமிழ் மரபு கவிதைகளில் அசை, சீர், அடி, தளை, தொடை ஆகியன இடம்பெறுவது போல திரையிசைப்பாடல்களில் பல்லவி, அநுபல்லவி, சரணம் அல்லது எடுப்பு, உடனெடுப்பு, அடி என்ற மூன்று உறுப்புகள் பொதுவாக இடம்பெறுவதுண்டு(பாரதிதாசன்,1997).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திரையிசைப் பாடலின் தொடக்கம் பல்லவி அல்லது எடுப்பு எனப்படும். இப்பகுதி, பாடலில் திரும்பத் திரும்ப இடம்பெறுவதாக அமையும். இது திரைக்கதைச் சூழலுக்கு ஏற்றவாறு ஒரு நிகழ்ச்சியை அல்லது சிக்கலை முன்வைக்கும் உட்கருத்துடன் விளங்கும். பாடலின் இத்தொடக்கம் நன்றாக அமையுமானால் பாடல் வெற்றிபெறும் என்ற மரபுவழி நம்பிக்கை உள்ளதால், திரைப்பட இயக்குநர்களும் இசையமைப்பாளர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் கருத்தும் சொல்லமைப்பும் வெளிப்படும் அளவிற்குப் பல்லவி அமையும் வரை பாடலாசிரியர்களை மீண்டும் மீண்டும் எழுதத் தூண்டுவது வழக்கம்.

பாடலின் அடுத்த பகுதி அநுபல்லவி அல்லது உடனெடுப்பு. இது, பாடலின் தொடக்கத்தில் கூறப்பட்ட கருத்தை விளக்கத் துணைசெய்யும் இணைப்புப் பகுதியாகும். பாடலின் இறுதிப் பகுதி சரணம் அல்லது அடி எனப்படும். இப்பகுதியில் தொடக்கத்தில் இடம்பெற்ற சிக்கல் அல்லது உட்கருத்து, தெளிவான கருத்துகளால் விளக்கப்பட்டு நிறைவுபெறும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழின் முதல் பேசும் படம் 'காளிதாஸ்' 1931-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ஆம் நாளில் திரையிடப்பட்டது. இப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள் சோதனை முறை ஒலிப்பதிவிற்காகப் பம்பாய்க்குச் சென்ற தமிழ் நடிகை டி.பி.ராஜலட்சுமியால் பாடப்பட்டவையாகும். அப்பாடல்கள் யாவும் மதுர.பாஸ்கரதாஸ் அவர்களால் எழுதி நாடக மேடைகளில் பாடப்பட்டு வந்தவையே ஆகும். எனவே, முதல் தமிழ்ப்படத்தின் பாடல் எழுதும் வாய்ப்பு மதுர.பாஸ்கரதாஸுக்குக் கிட்டியதால் தமிழில் முதல் பாடலாசிரியர் என்னும் பெருமை அவருக்கு வாய்த்தது(நாராயணன்,அ.2008). நாடகத்தின் கனிந்த வளர்ச்சியே திரைப்படம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்பதனால் தமிழ்த் திரையிசைப்பாடல்களின் தோற்றம் தமிழ்நாடக மேடைகளின் கொடையால் உருவானது என்பதை அறியலாம்.

பஜனைகளில் பாடி, கச்சேரி மேடைகளில் நுழைந்து, கர்நாடக சங்கீத இசைப்பாடல்களைச் சொல்லிக் கொடுத்து வந்த பாபநாசம் சிவன் அவர்களின் வருகை திரையிசைப்பாடல்களில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. 1933-இல் வெளிவந்த ‘சீதாகல்யாணம்’ திரைப்படத்தில் பதினான்கு பாடல்களையும் பாபநாசம் சிவன் அவர்களே எழுதினார். அவர் பாட்டும் மெட்டும் அமைத்துச் சொல்லிக் கொடுத்த பாடல்களில் கர்நாடக சங்கீதக் கீர்த்தனைகள் இடம்பெற்றிருந்தன.

திரையிசைப்பாடல்களில் மேடைநாடகப் பாடல்களும், அக்காலக்கட்டத்தில் பிரபலமாகியிருந்த கர்நாடக சங்கீதம், இந்துஸ்தானி இசை, நாட்டுப்புறப் பாடல் மெட்டுக்களில் இசைத்தட்டுகளாக வெளிவந்து வெற்றியடைந்த மெட்டுக்களும் பயன்படுத்தப்பட்டு வந்தன. பாபநாசம் சிவன் அவர்களும் இதே முறையைப் பின்பற்றினார். திரைத்துறையைச் சார்ந்தவர்களுக்கு நல்ல மெட்டுக்கள்தாம் தேவைப்பட்டதே ஒழிய அவை இசையமைப்பாளர்களின் சொந்த மெட்டுக்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படவில்லை. ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்றால் கூடுதல் பலம் என வாமனன்(2001) கூறுவது, பாபநாசம் சிவன் காலத்தில் தொடங்கிய திரையிசைப்பாடல்களின் வெற்றிச் சூத்திரமாக அமைந்தது என்பதற்குச் சான்று பகர்கிறது.

1934-ஆம் ஆண்டில் வெளிவந்த ‘பவளக்கொடி’ திரைப்படத்தில் 50 பாடல்களைப் பாபநாசம் சிவன் எழுதினார். அதே ஆண்டில் வெளியான ‘ஸ்ரீநிவாச

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கல்யாணம்' என்ற திரையில் தமிழ் வித்துவான் ராமானுஜ அய்யங்காரால் இயற்றப்பட்ட 50 பாடல்கள் இடம்பெற்றன(நாராயணன்.அ,2008). 1936-ஆம் ஆண்டில் வெளியான 'சந்திரஹாசன்' திரைப்படத்தில் 41 பாடல்களை இயற்றி மெட்டமைத்தார் பாஸ்கரதாஸ்(வாமனன்,2004). இவ்வாறு திரைப்படங்களைத் தன்வயப்படுத்தி ஆதிக்கம் செலுத்தி வந்தன திரையிசைப்பாடல்கள்.

தமிழ்த் திரையிசைப்பாடல்களின் வளர்ச்சியானது, நாடக மேடைகளின் கொடையால் உருவாகி மதுர.பாஸ்கரதாஸ், பாபநாசம் சிவன், உடுமலை நாராயண கவி முதலிய திரையிசைக் கவிஞர்களால் ஓரளவு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளதைக் காணலாம். தொடர்ந்து, தமிழ்த் திரையிசைப்பாடல்களை இலக்கியமாக்கும் முயற்சியில் கவியரசு கண்ணதாசன், காவியக்கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் வெற்றிபெற்றுத் திரையிலக்கியத்திற்குப் புதிய பாதையை வகுத்தனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.2 கவிஞர் வாலி

ரங்கராஜன் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் வாலி, திருச்சியைச் சேர்ந்த திருவரங்கத்தில் 1931-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் நாள் சீனிவாச அய்யங்கார் – பொன்னம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பத்தாம் வகுப்பு வரை கல்வி பயின்ற இவர் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்றவற்றிலும் பயிற்சி பெற்றிருந்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சிறுவயதிலேயே கவிதை, கதை, கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால், அவற்றைவிட ஓவியங்கள் வரைவதில் ஆர்வம் மிக்கவராய் இருந்தார். ஓவியர் ‘மாலி’யின் தாக்கம் வாலியிடம் இருந்ததால் அவரது பள்ளித் தோழர் பாபுவின் விருப்பத்திற்கிணங்க ‘வாலி’ என்று புனைப்பெயர் சூட்டிக் கொண்டார்.

தம் நண்பர்களுடன் சேர்ந்து ‘நேதாஜி’ என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பிரதியைத் தொடங்கி நடத்தினார். அந்த நண்பர்களில் ஒருவர் புகழ்பெற்ற எழுத்தாளராக வாழ்ந்து மறைந்த சுஜாதா ஆவார்.

‘கவிஞனின் காதலி’ என்னும் பெயரில் ‘அம்பிகாவதி’ கதையை நாடகமாக்கி அரங்கேற்றினார். 1956-ல் ‘மன்னர் மன்னன்’ என்னும் ஒரு சரித்திர நாடகத்தை எழுதி அரங்கேற்றினார். அதன் உரையாடல்களை மு.கருணாநிதி அடுக்குமொழிக் கவிதை பாணியில் எழுதியிருந்தார்(தமிழ்வாணன்,லேனா.1985).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கவிஞர் வாலிக்குத் திரைப்படப் பாடல் எழுதும் விருப்பத்தைத் தூண்டியவர்கள் இயக்குநர் ஏ.ராஜாராம், டி.எம். சௌந்தரராஜன், பி.வி.ஸ்ரீனிவாஸ் போன்றவர்கள் ஆவர். திரைப்படப் பாடல் வாய்ப்புக்காகப் பெரிதும் முயற்சி எடுத்தவர் வி.கோபாலகிருஷ்ணன் ஆவார். இவர் மூலமாகக் கெம்ப்ராஜ் தயாரித்து 1959-ஆம் ஆண்டு வெளிவந்த ‘அழகர் மலைக் கள்வன்’ என்ற திரைப்படத்தில் ‘நிலவும் தாரையும் நீயம்மா’ என்ற முதல் பாடல் எழுதும் வாய்ப்பு வாலிக்குக் கிட்டியது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்த்திரையுலகின் மக்கள் திலகமாக வலம் வந்த எம்.ஜி.ஆர் தம் படங்களில் பாடல்கள் எழுத வாலிக்கு அதிக வாய்ப்புகளைத் தந்தார். எம்.ஜி.ஆருக்கு ஏற்றாற் போல் பாடல்கள் எழுதி அவரது புகழ் பரவக் காரணமாக இருந்தவர்களுள் வாலியும் ஒருவராவார். வாலி எம்.ஜி.ஆருக்காக எழுதிய முதல் பாடல் 'நல்லவன் வாழ்வான்' திரையில் இடம்பெற்ற 'சிரிக்கின்றாள் இன்று சிரிக்கின்றாள்' என்ற பாடலாகும்.

'மகுடி' உட்பட சில படங்களுக்குக் கதை, திரைக்கதை, வசனமும் எழுதியுள்ளார் வாலி. இவருடைய எண்ணத்தில் உருவாகிய கதையான 'ஒரே ஒரு கிராமத்திலே' படமாக்கப்பட்டு குடியரசுத் தலைவரின் விருது பெற்றது. ஒரு சில படங்களில் வாலி நடித்துமிருக்கிறார். இவரது பொய்க்கால் குதிரையில் வரும் பல கவிதைகளை 'அக்னி சாட்சி' என்ற படத்தில் இயக்குநர் பாலச்சந்தர் பயன்படுத்தியிருக்கிறார்(வாலி,1995). 1985-ஆம் ஆண்டில் மட்டும் கவிஞர் வாலி 77 திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதி சாதனை படைத்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அம்மா, பொய்க்கால் குதிரை, நிஜகோவிந்தம் உட்பட பல புதுக்கவிதைத் தொகுப்புகளை வாலி படைத்திருக்கிறார். இவர் எழுதிய கதைத்தொகுப்பு 'அது அதில் இல்லை' என்பதாகும். 'நானும் இந்த அரைநூற்றாண்டும்' என்னும் பெயரில் தன்னுடைய திரைத்துறை அனுபவங்களை நூலாக வெளியிட்டிருக்கிறார். இவர் 10000-க்கும் அதிகமான திரையிசைப் பாடல்களை எழுதியிருக்கிறார்(வாலி,1995). 'நாய்வால்', 'பக்தி பாமாலை' என்னும் நூல்களையும் படைத்திருக்கிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

புதுக்கவிதையில் இராமாயணத்தை 'அவதாரப் புருஷன்' என்ற பெயரிலும் மகாபாரதத்தைப் 'பாண்டவர் பூமி' என்ற பெயரிலும் வெளியிட்டிருக்கிறார். இராமானுசர் கதையை, 'இராமானுஜ காவியம்' என்ற பெயரில் ஆனந்த விகடனில் தொடராக எழுதி முடித்தார். பிறகு அத்தொடர் தொகுப்பு நூலாகவும் வெளிவந்தது(வாலி,1995).

கவிஞர் வாலிக்கு 1970-ஆம் ஆண்டின் சிறந்த கவிஞருக்கான வெள்ளி யாழும், ரூ 3000-மும் பரிசாகத் தமிழக அரசு வழங்கியது. 1971-72 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் 'கலைமாமணி' விருது வழங்கியது. 1974-ஆம் ஆண்டு திருப்பனந்தாள் பாவலர் மன்றம் புலவர் கீரன் தலைமையில் 'திரைக்கவித் தென்றல்' விருதை வழங்கியது. சினிமா ரசிகர்கள் சங்கம் நான்கு முறை சிறந்த கவிஞர் என்ற விருதை வழங்கியுள்ளது(வாலி,1995). தமிழக அரசால் கவிஞர் வாலி இருமுறை சிறந்த கவிஞராகத் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்(குருராகவேந்திரன்,1985).

05-4506832 pustaka.upsi.edu.my Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.3 அகத்திணை மரபு

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதலாவது இயலாகவும் அதன் தோற்றுவாயாகவும் அமைந்திருப்பது அகத்திணையியல் ஆகும். இவ்வியலானது, அகப்பொருள் இலக்கணத்தைப் பகுப்பாய்வு செய்து ஒரு கொள்கையாக்கமாக வரையறுத்துக் கூறும் முக்கியத்துவம் வாய்ந்த இயலாகும். அகத்திணைக்குரிய இலக்கிய மரபை விளக்கும்போது,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்"

(தொல்.பொருள்.56)

என்கிறது தொல்காப்பியம்.

தொல்காப்பிய அகத்திணையியல் அகப்பொருள் மரபுகள் பற்றிய பொதுவான, அடிப்படையான செய்திகளை எடுத்துக்கூறி, ஓர் அக இலக்கியம் எத்தகு கூறுகளைக் கொண்டு இயற்றப்படல் வேண்டும் என்பதை விளக்குவதாய் அமையப்பெற்றுள்ளது.

இவ்வியலில் அகப்பொருளை விளக்க முற்பட்ட தொல்காப்பியம் திணைகளை ஏழாகப் பகுத்து அதனடிப்படையில் இலக்கணம் கூறியுள்ளது. இவற்றுள், ஐந்திணைகளான முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகியவற்றின் முதல், கரு, உரிப்பொருள்கள் முதலில் விளக்கம் பெற்றுக் கைக்கிளையும் பெருந்திணையும் உரிப்பொருள் அளவில் இறுதியில் விளக்கப்பட்டுள்ளன. அகத்திணையியலில் கைக்கிளை, பெருந்திணைக்குரிய மாந்தர்கள், ஐந்திணைக்குரிய மக்கட்பெயர்கள், திணைமயக்கம், குறியிடம், குறிகள், களவு, கற்பிற்குரிய பிரிவொழுக்கங்கள், அப்பிரிவுகளுக்குரியோர், பிரிவிற்குரிய காலம், உள்ளுறை, உவமம், அகத்திணைக்குரிய பாவடிவங்கள் போன்ற செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

அகனைந்திணைகளை மேற்கூறிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய முக்கூறுகளின் அமைப்பினால் உணர்தல் வேண்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கைக்கிளை, பெருந்திணைகளை அவரவர் கூறும் கூற்றுகளால் அறிதல் வேண்டும். அகத்திணைப்பாடலை இயற்றும் புலவர்களுக்கு நுண்ணிய உத்திகளும், விதிமுறைகளும், பட்டறிவும் வேண்டும் என்று சுட்ட வந்த அறிஞர் வ.சுப.மாணிக்கம்(2002),

> “அகப்பாடல் இயற்றுதற்கு நிலத்தின், காலத்தின், இயற்கையறிவு வேண்டும். மரஞ்செடி கொடி பறவை விலங்குகளின் தன்மைக்கேள்வி வேண்டும். அஃறிணை உயிர்களின் இன்பப் புணர்வை, மக்களின் இன்பப் புணர்வோடு தரஞ்செய்து பார்க்கும் சீர்மை வேண்டும். காதல்வாய்ப் பழகும் இளநெஞ்சங்களின் தூய என்ண நாடிகளைக் கற்பனையால் அளந்து கவின் செய்யும் மனப்பதம் வேண்டும். சங்க இலக்கியத்து அகத்திணைப் பாடற்றொகையும், அகம் பாடினோர் தொகையும் புறத்திணையிலும் மும்மடங்கு மிக்கிருத்தலை மதிக்குங்கால், சங்கச் சான்றோர் அகம் பாடுவதையே புலமைக்கிடனாகப் போற்றினர் என்ற கருத்து வெளிப்படுமன்றோ?”
>
> (வ.சுப.மாணிக்கம்,2002:ப.16)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

என்று பகர்வது சிந்திக்கற்பாலது.

இலக்கணம் என்பது இலக்கியத்தை வரையறுத்துக் காட்டுவது. தமிழில் காணப்படும் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். உலகமொழிகள் அனைத்தும் எழுத்து, சொல் ஆகியவற்றுக்கே இலக்கணம் கூற தமிழ்மொழி மட்டுமே வாழ்வியலுக்கும் சேர்த்து இலக்கணம் கூறுகிறது. வடமொழியையும் தமிழ்மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ந்த சிவஞான முனிவரும் தமிழரின் பொருள் மரபும் பிறவும் வடமொழியில் காணப்பெறாதவை என்று உறுதிபடக் கூறுகிறார்(தமிழ்ப்பொழில்,ப.298). இவ்வாறு அனைத்து இலக்கணங்களையும் குறைவறப் பெற்று செம்மொழியாகத் திகழும் தமிழ் மொழியின் உயர்தனிப் பண்புகளில் ஒன்றாகவும், தமிழரின் தனிநெறியாகவும் விளங்குவது இம்மொழியிலுள்ள அகத்திணை மரபாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ் மொழிக்கே உரிய கவிதைக் கோட்பாடு இந்தத் திணை இலக்கியக் கோட்பாடு எனலாம். இக்கோட்பாடு குறித்து அகத்தியலிங்கம்(2001) தமது 'தொல்காப்பிய உருவாக்கம்' என்ற நூலில், "மனித வாழ்வினைப் பாடி மகிழ நினைத்த அன்றைய தமிழ் இலக்கியப் புலவர்கள் அதனை அகம், புறம் என இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றின் அடிப்படைக் கூறுகளை இலக்கிய நயமும், கற்பனைத் திறனும், கவிதை உணர்வும் தோன்றப் பாடுவதற்கென ஒரு மரபை வகுத்துக் கொண்ட அடிப்படையில்தான் இந்தத் திணைத் தத்துவம் தோன்றியது"(அகத்தியலிங்கம்,2001:ப.31) என்று மிக நுட்பமாக அறிமுகம் கொடுக்கிறார்.

நெடுஞ்செழியனின்(2007), "திணை வாழ்வியலில் நாம் திணைகளின் அமைப்பு முறைகளையும், அவற்றின் இலக்கணக் கூறுகளையும் ஆராய்வதுடன் அன்பின் ஐந்திணையில் முதற்பொருள் - கருப்பொருள் - உரிப்பொருள் என வகைப்படுத்தப்பட்டிருக்கும் பொருட்கூறுகளைப் பற்றியும் ஆராய்வதில்தான் திணை வாழ்வியலின் முழுமையை அறிந்து கொள்ள முடியும்"(நெடுஞ்செழியன்,2007.ப.96) என்ற கருத்தாக்கமும் திணை குறித்த ஆய்வுப்பொருளுக்குத் துணைபுரிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திணை இலக்கியம் குறித்து அறிஞர்களிடையே பலவித கருத்தாக்கங்கள் நிலவி வருகின்றன. கோவிந்தன்(1999) கருத்துப்படி, "திணை என்னும் சொல் ஒரு நிலப்பரப்பு என்னும் பொருள் தருவதாய்த் திண் அல்லது திட் என்ற வேர்ச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகிறது. திணை என்ற சொல் பொதுவாக நிலம் என்ற பொருளில் ஆளப்படுகிறது" (கோவிந்தன்,1999.ப.14) என்பதாய் அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழண்ணலின்(2003), "திணை இலக்கியம் நில அடிப்படை உடையது. நிலமும் பருவமும் பொழுதுகளும் இயற்கையும் அவற்றைப் பின்னணியாகக் கொண்ட மனித வாழ்வும் இயைபுபடப் புனையப்படுவதே திணை இலக்கியமாகும். நிலச்சாயலும் அதில் வாழும் உயிரினச் சாயலும் ஓவியமாகப் படிந்து கிடப்பதே திணை இலக்கியமாகும்"(தமிழண்ணல்,2003.ப.109) என்ற கருத்து நிலமும் உயிரும் சேர்ந்த நிலையே திணை என்பதாக அமைகின்றது.

சீனிவாசனின்(1974) கருத்துப்படி, திணைக் கண்ணோட்டமானது குன்றுகளிலிருந்தும் மலைகளிலிருந்தும் கீழேயுள்ள சமவெளிப் பகுதிக்குத் தமிழர்கள் பரவியதை வெளிப்படுத்துகிறது. காடுமேடுகளில் அலைந்து திரிந்த மக்கள் வீடுகட்டி ஓரிடத்தில் நிலைத்து வாழத் தலைப்பட்ட போழ்து குடும்பங்கள் பெருகிக் குடியாக வளர்ந்து, பல குடிகள் இணைந்து பிணைந்து குலமாயிற்று. எனவே, சமுதாய வரலாற்று அடிப்படையில் பார்த்தாலும் திணை' என்ற சொல் முதலில் குடியிருப்பைக் குறித்திருக்க முடியாது என்கிறார் சிவத்தம்பி(2007**).** இவரின் கருத்துப்படி திணை என்பது முதலில் நிலத்தையே சுட்டியிருத்தல் வேண்டும் என்பதாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திணை என்ற சொல் நிலம், குடி, ஒழுக்கம் என்ற பொருள்களைத் தரும் என்று சீனிவாசன்(1974) சுட்டுகிறார். திணை என்ற சொல் ஒழுக்கத்தினைக் குறிக்கும் என்று சுப்புரெட்டியாரும்(1964) குறிப்பிடுகின்றனர். அது போலவே அம்மன்கிளி(2006), "அகத்திணையியல் புறத்திணையியல் என வழங்குமிடத்து திணை என்ற சொல் ஒழுக்க முறையையே குறித்தது. அத்துடன் அகத்திணையியலில் வரும் உட்பிரிவுகளும் திணை என்பது ஒழுக்கம் என்ற

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பொருளில் வழங்கப்பட்டிருப்பதைக் குறிக்கின்றன" எனச் சுட்டி திணை என்பது ஒழுக்கம் என்ற பொருளையே குறிக்கும் என்று நிறுவுகின்றார். (அம்மன்கிளி,2006.ப.49)

"திணை என்ற இச்சொல்லிற்கு ஒழுக்கம் என்பது பொருள். மக்கள் ஆறறிவு படைத்தவர்கள். தம் அறிவைக் கொண்டு நன்று இது, தீது இது எனப் பகுத்தறிந்து ஒழுகுவதால் மேன்மேலும் உயர்ச்சியடையக் கூடியவர்கள். இந்தத் திறமும் ஒழுக்கமும் விலங்குகளிடம் காணப்பெறா. உயரக்கூடிய ஒழுக்கமுடைய மக்களை உயர்திணை என்றும், உயர்ச்சிக்குத் தேவையான நல்லறிவும், ஒழுக்கமும் வாய்க்கப்பெறாத ஏனைய உயிர்களை அஃறிணை என்றும் தொல்காப்பியம் வகைப்படுத்துகிறது என்று திணை என்ற சொல் ஒழுக்கம் என்ற பொருளைக் குறிப்பதற்கான காரணத்தை விளக்கியுள்ளார்.(தேவசேனாதிபதி,1962:ப.14)

05-4506832 pustaka.upsi.edu.my Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அறிவியல் மற்றும் மெய்யியல் கருத்துகளைத் திணை' என்ற சொல் தம்முள் உள்ளடக்கிய நிலையில் உள்ளதாக பாமயன் விளக்குவதை நெடுஞ்செழியன்(2007) சுட்டுகிறார்.. "திணை என்ற தமிழ்ச் சொல்லிற்கு வாழிடம் என்பதோடு மட்டுமல்லாது ஒழுகலாறு என்ற மற்றொரு ஆழமான பொருளும் உள்ளது. இன்றைய புதித (Modern) அறிவியல் கூறும் விளக்கத்தை உள்ளடக்கியதாகத் திணை என்ற சொல் இருப்பதைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை" (நெடுஞ்செழியன்,2007:ப.98)

மேலும் தமிழரின் திணைக்கோட்பாடு மிகவும் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகவே தோன்றுகிறது. இதன் அமைப்புமுறை தமிழர்தம் மெய்யியலோடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்பு கொண்டதாக உள்ளது. இதனை, "இந்தத் திணைமவியல் என்பது தமிழர்களின் மெய்யியலாக அதாவது இயற்கையை எவ்வாறு நோக்குவது? எவ்வாறு அணுகுவது? என்கின்ற ஓர் அறிவுக் கோட்பாடாக இருந்துள்ளதை நாம் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவற்றின் வழியாகக் கண்டறிய முடியும். தமிழர்களின் மெய்யியல் என்பது இறைமைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதன்று. அது இயற்கைக் கோட்பாடான திணைமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இது இன்றைய காலகட்டத்திற்கும் ஏற்றதொரு விடுதலைக் கோட்பாடாக உள்ளது. மாந்தர் விடுதலையை மட்டுமின்றி ஒட்டு மொத்த உயிரின விடுதலைக்கும் இது வழிகாட்டுகிறது" என்று திணைக் கோட்பாட்டினை உலகிற்கு அடையாளப்படுத்தும் பாமயனின் கருத்தை முன்வைக்கிறார்.(நெடுஞ்செழியன்,2007:ப.99)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், "திணை என்ற சொல் ஐந்திணையை மட்டுமே சுட்டி நிற்கவில்லை. மாறாக, குலம், நிலம், ஒழுக்கம் ஆகிய மூன்றும் இணைந்து நிற்கும் தன்மையே திணை எனக் கருதப்பட்டுள்ளது தெளிவாகின்றது. இங்கே குலம் என்பது நிலத்திற்குரிய மக்கள் எனப் பொருள்படும். இதனால் மக்களின் வாழ்வியல், வாழ்வியலோடு தொடர்புடைய நிலப்பகுதி, வாழ்வியலும் நிலச்சூழலும் இணைவதால் வெளிப்படும் நெறிமுறைகள், நெறிமுறைகளை வகுக்கின்ற எண்ணப்போக்கு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகத் திணை' கருதப்பட்டது என்பது தெளிவாகும்" என்கிறார் நெடுஞ்செழியன்(2007:ப.98). இவரின் கருத்துப்படி திணை என்பது நிலம், குடி, ஒழுக்கம் என்ற முப்பொருளையும் உணர்த்துகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இராமச்சந்திர தீட்சிதருக்கு(1936), திணைக் கருத்தோட்டமானது தென்னிந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய கருத்துக் குறிப்பாக உள்ளது. "வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தென்னிந்தியா ஏராளமான இனக்குழு மக்களைக் கொண்டிருந்தது. அவர்களுள் ஐந்து குழுவினர் மட்டும் இப்பகுதியின் புவியியல் பிரிவுகளுக்கு ஏற்ப சிறப்பாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளனர். தமிழரது சமுதாய அமைப்பு தனிப்பட்ட இயல்புகளை உடையதாயிருந்தது. இவ்வியல்புகள் சூழ்நிலையின் சிறப்பான தன்மைகளால் உருவாயின. இதனை மானுடவியல் விளக்குகின்றது. இத்தனிப்பட்ட இயல்பினால்தான் வரலாற்றுக்கு முற்காலத்தில் வேறுபட்ட ஐந்து வளர்ச்சிநிலைகளாக ஒரு காலத்தில் அவை வெளிப்பட்டன"(V.R.Ramachandra Dikshithar,1936.pg.178)

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளிலிருந்தும், பல அறிஞர்களின் கருத்துகளிலிருந்தும் திணை என்பது நிலம், குலம், ஒழுக்கம் ஆகிய முப்பொருள்களையும் தரும் என்பது புலனாகின்றது. இருப்பினும் திணை' என்பது பெரும்பான்மை நிலத்தையும், சிறுபான்மை ஒழுக்கத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம். காரணம் நிலமில்லாமல் மக்களின் வாழ்க்கையும் செயல்களும் நடைபெறாது. மக்களின் உயிரோட்டமே நிலத்தில்தான் படிந்து கிடக்கிறது. அத்தகைய நிலத்தைப் பொறுத்தே மக்களின் ஒழுக்கம் அமைவதால் மக்கள் வாழ்வு வளம் பெறுவதற்குத் திணையாகிய இந்நிலமே அடிப்படை எனக் கொள்ளலாம்.

அகம் என்பது காதல் பற்றியது. "முதலில் 'உள்ளே' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்ட அகம் பின்னர் அவர்களின் அகத்தினுள்ளே நடைபெற்ற காதல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விவகாரங்களைக் குறிக்கப் பயன்படத்தொடங்கிற்று என்கிறார் அம்மன்கிளி முருகதாஸ்(2006).

இத்தகைய அகத்திணைக்குப் பொருளான காதல் ஆண், பெண் என்ற இருபாலருக்கும், உயர்திணை, அஃறிணை என்ற இருதிணை உயிர்களுக்கும் பொதுவானது. இதனை,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றதாகும்"
(தொல், பொருளியல், 1169)

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியலாம். அகத்தைப் பற்றியத் திணைகள் ஏழாகும். இதனை,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"
(தொல்.அகத்.947)

என்று தொல்காப்பியமும்,

"மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த
அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை என எழு பெற்றித்தாகும்"
(நம்பியகப்பொருள்,நூ.4)

என்று நம்பியகப்பொருளும் உரைக்கின்றன. எழுதிணை என்பது கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணையாம். இவை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற மூன்று வகைகளால் சுட்டப்படுகின்றன. இவை முறையே ஒருதலைக்காமம், ஒத்த காமம், ஒவ்வாக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காமம் எனப் பகுக்கப்பட்டுள்ளன. மேலும், அகத்திணை களவு, கற்பு என்ற இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

ஆண்டியப்பனின் கூற்று, மூவகைக் காதலையும் காட்சிப்படுத்தி நிற்கின்றது. "எழுதிணை என்பது பொதுவாகக் குறிப்பிடினும் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என முக்கூறுபடுத்துவதும் உண்டு. அதனால் கைக்கிளை ஒருதலைக்காமம், ஐந்திணை ஒத்த காமம், பெருந்திணை ஒவ்வாக் காமம் என்ற எண்ணம் எவ்வாறோ வேரூன்றி விட்டது. தொல்காப்பியரோ அவற்றை ஒரு பொருளின் மூன்று நிலைகளாகவே கருதுகின்றார். உண்மையில் அரும்பு, மலர், அலர் என நிற்பவை அவை. ஈங்கே வருவாள் இவள் யார்கொல் எனும் போது அகத்தைச் சார்ந்த கைக்கிளை அரும்பும். ஒருவர் குறிப்பை ஒருவர் அறிந்த பின் ஐந்திணை மலரும். பெரிதே காமம் என் உயிர்தவச் சிறிதே எனப் புலம்பும் போது பெருந்திணை முதிரும்"(ஆண்டியப்பன்,2001:ப.10) இதிலிருந்து கைக்கிளையும் பெருந்திணையும் ஐந்திணையை ஒட்டி வரும் அகமரபுகள் என்பதும், வேட்கையின் இருவேறு குறிப்பு நிலைகளே என்பதும் தெளிவாகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை முறையே காதல் வாழ்வின் தொடக்கமாகவும் மிகுதி உணர்வாகவும் தமிழண்ணல்(2003) கருதுகிறார். "கைக்கிளை – சிறு உறவு, காதல் வாழ்வில் ஆடவனின் மனநிலை பற்றிய தொடக்கவுணர்வு. பெருந்திணை - இடையூறுகளால் தடைபடும்போது மிகுதிப்படும் காமவுணர்வு. இடைப்பட்டவை ஐந்தும் அளவான் அமைந்தவை" என்பதாக அகத்திணைகளுக்கு வரையறையுடன் விளக்கம் அமைக்கிறார். (தமிழண்ணல்,2003:ப.30)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கைக்கிளை, பெருந்திணை என இவ்விரண்டையும் சேர்த்துக் கொள்ளாவிடின் அகத்திணை நகமற்ற விரல் போலவும் முழுவனப்பில் ஒரு குறையுடையதாகத் தோன்றும் என்ற வ.சுப.மாணிக்கத்தின்(2002) கருத்து இங்கு நினைவுகூறத்தக்கது.

இவர்களின் மேற்கண்ட கருத்தாக்கங்களிலிருந்து முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணை மட்டும் அகத்திணை ஆகாது. கைக்கிளை என்ற குறை ஒழுக்கமும், பெருந்திணை என்ற பேரொழுக்கமும் சேர்ந்ததே அகத்திணை என்பதும் பெறப்படுகின்றது.

சிறிதும் குறைவில்லாமல் தூய்மையான அன்பில் தோய்வதே அகன் ஐந்திணை எனப்பெறும் அன்பின் ஐந்திணை ஆகும். அகத்திணைகளுள் அன்பின் ஐந்திணையே ஓங்கி நிற்கிறது. அதனால் தான் தொல்காப்பியர் "மக்கள் நுதலிய அகனைந்திணை"(தொல்.அகத்.1000) என்று சிறப்பிக்கிறார். ஐந்திணை மக்கள் வாழ்க்கையில் நிகழ்கின்ற இயல்பான ஒழுக்கத்தைச் சுட்டுகிறது. நாற்கவிராச நம்பியும் ஐந்திணையை "அன்புடைக் காமம்"(நம்பியகப்பொருள்,நூ.4) என்கிறார். ஒருவரின் மனக்குறிப்பை ஒருவர் அறிந்தபின் மலர்வது ஐந்திணை ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பல பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் காதல் ஒன்று படுத்தும் உயர்ந்த ஊழின் வசத்தால் தலைமக்கள் இருவருக்கும் குறித்த காலத்தில் சந்திப்பு நிகழும். இதனை,

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றே உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே"
(தொல்.களவியல்,1039)

என்கிறார் தொல்காப்பியர். மேலும் தலைவனுக்கும் தலைவிக்கும் குலப்பிறப்பு முதலிய பத்துத் தன்மைகளும் பொருந்தி வருதல் வேண்டும். இதில் தலைவியைவிட தலைவன் சிறந்திருத்தலே உயர்ந்தது என்பர்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காமவாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"
(தொல். மெய்ப்பாட்டியல், 1219)

மேற்குறிப்பிட்ட பத்தும் ஐந்திணைக் காதலரிடையே ஒத்த தன்மையில் பொருந்தி வருதலே சிறப்பாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலப்பகுப்பிற்கும் இவ்வகை சந்திப்பு பொதுவானது. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன இந்த ஐந்திணை ஒழுக்கங்களுக்கு உரியனவாய் விளங்குகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

நில அமைப்பினை நம் முன்னோர் நானிலமாகக் கண்டனர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"
(தொல். அகத். 951)

கண்ணன் விரும்புகின்ற காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்றும், முருகன் விரும்புகின்ற மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்றும்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்திரன் விரும்புகின்ற மிகுதியான நீரையுடைய வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், வருணன் விரும்புகின்ற மிகுதியான மணலையுடைய கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்றும் அழைக்கப்பெறும். மேற்கூறிய நால்வகை நிலங்களைப் பற்றிய சூத்திரத்தில் தொல்காப்பியர் 'உலகம்' என்ற சொல்லை ஒவ்வொரு நிலத்திற்கும் பயன்படுத்துகிறார். "உலகம் என்ற சொல் பயன்படுத்தப்படுவது ஒவ்வொரு பகுதியும் தன்னளவில் மற்ற பகுதிகளுடன் மாறுபட்டது என்பதை உணர்த்துகின்றது. இந்நிலப்பகுதிகளின் வேறுபாடுகள் மிகவும் அதிகமாக இருத்தலின் இவை தம்முள் தாமே உலகமாயின" என்ற சிவத்தம்பியின் கருத்து இந்நூற்பாவிற்குப் பொருத்தமாய் அமைகின்றது(சிவத்தம்பி,1987.பக்.37-38)

05-4506832 pustaka.upsi.edu.my Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வாறு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று நான்கு நிலத்தை மட்டுமே தொல்காப்பியர் கூறியதிலிருந்து பாலைக்கு எனத் தனிநிலத்தை வரையறுக்கவில்லை என்பதை உணரலாம்.

"நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே"

(தொல். அகத். 948)

என்று தொல்காப்பியம் பாலையை நீக்கி நானிலமாகக் கொள்கிறது. பாலையைக் கலப்பு நிலம்" என்கிறார் இராகவையங்கார்(1922). பாலைக்கு நிலமின்மையின் நானிலம்' என்கிறது திருச்சிற்றம்பலக்கோவை. தொல்காப்பியம் பாலைக்கு நிலம் உண்டென்றோ, அதன் பெயர் பாலை என்றோ அகத்திணையியலில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அதற்கு உரை எழுதிய உரையாசிரியர்களும் பாலையும் நிலப்பாகுபாட்டில் உண்டென்று உறுதியாகக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கூறவில்லை. பின்னர் தோன்றிய சிலப்பதிகாரம் திரிநிலம் உண்டென்று குறிப்பாகச் சொல்லிச் செல்கிறது.

> "முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
> நல்லியல்பு இழந்து நடுங்கு துயருறுத்துப்
> பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"
> (சிலப்பதிகாரம், காடுகாண்காதை,பக்.64-66)

என்று முல்லையும் குறிஞ்சியும் மாறுகின்ற நிலமாகப் பாலை அறியப்பட்டுள்ளது. பாலை என்பது நிலமன்று. எனினும் கோடைக் காலத்தில் ஏற்படும் பருவகால மாற்றம் காரணமாக உண்டாகும் நிலம் என்பது இதனால் உணரப்படுகிறது. பாலை நிலம் குறித்து இளம்பூரணர் கொண்டிருந்த சிந்தனையைச் சுட்ட விழைந்த அருணாசலம் பிள்ளை(1975), "பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார்" என்று தம் உரையில் குறிக்கிறார். (அருணாசலம்பிள்ளை,1975:ப.70)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உலகளாவிய பார்வையுடன் பாலையை இணைக்க முற்பட்ட கோவிந்தசாமி(1966), பாலை தமிழகத்து இல்லையாயினும் தமிழர் சிந்து பாலஸ்தீனப் பாலைவனங்களைக் கடந்து சுமேரிய நாகரிகத்தினைக் கண்டவராகலின் தென்தமிழ்நாட்டு வறண்ட (மாவட்டப்) பிரதேசங்களைக் கண்டவராகலின் பாலையையும் திணையாகக் கொண்டனர் என்றும் பொருளுக்காக மத்திய கிழக்குக்குப் பிரிந்த குறிப்பினையுடையது பாலைத்திணை என்றும் பகர்கிறார். ஆண்டியப்பன்(2001), "முல்லையும் குறிஞ்சியும் பருவமுறைமை திரிபடைய பாலையாம் என்று சிலம்பு கூறும். நெய்தலும் மருதமும் திரிந்தாலும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அந்நிலையே. தமிழகத்தில் பாலைவனம் இல்லை. பாலை நிலம் உண்டு. அதுவும் திரிபால் ஏற்படுவதே ஆகும். அந்நிலத்தை இடைச்சுரம் என்றும் குறிப்பர். இசைத்துறையில் நாற்பெரும் பண்கள் திரிபடைந்து பாலையாவதையும், இசையுலகில் இடைவெளியைப் பாலை அல்லது சுரமென்று அழைப்பதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்" என்ற கருத்து பாலைக்கான பெயரமைவை இசைத்துறையோடு சேர்த்து நமக்கு விளக்குகிறது.(ஆண்டியப்பன்,2001:பக்.10-11)

இதிலிருந்து மழையின்மையால் வறட்சி ஏற்பட, எந்நிலமும் பாலையாகலாம் என்ற பொருள் கிடைக்கிறது. இதனைப் பின்பற்றியே பின்னர் வந்த இலக்கண ஆசிரியர்களும் நானிலத்துடன் பாலை என்ற தனிநிலத்தையும் சேர்த்துக் கொண்டனர். சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை என்று நம்பியகப்பொருள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

"குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே
வரையே சுரமே புறவே பழனம்
திரையே அவையே சேர்தரும் இடனே
எனவீரைவகைத் தனையியல் நிலமே"
(நம்பியகப்பொருள்,நூ.6)

என்ற நூற்பாவால் உரைக்கிறது. இதனைத் தொடர்ந்து இலக்கண விளக்கம், தமிழ்நெறி விளக்கம், முத்துவீரியம் முதலிய இலக்கண நூல்கள் பாலை என்ற தனிநிலத்தைப் பற்றிக் கூறுகின்றன.

"முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"
(தொல். அகத். 951)

என்ற தொல்காப்பிய நூற்பாவை அடிப்படையாகக் கொண்டு உரையாசிரியர்கள் நிலமானது ஒழுக்கத்தினால் பெயர்பெற்றது எனவும்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருப்பொருளால் பெயர் பெற்றது எனவும் இருவேறுபட்ட விளக்கத்தினைக் கூறுகின்றனர்.

கருப்பொருளே நிலங்களின் பெயர் வைப்பிற்குக் காரணம் என்கிறார் இளம்பூரணர்(1965). "முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக் குறியோ எனின், ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். என்னை காரணம் எனின், காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும், மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது ஆகலானும், தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும், பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையானும் இந்நிலங்களை இவ்வாறு குறியிட்டார் என்று கொள்ளப்படும். பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறியிட்டார்" என்று விளக்குகிறார். இளம்பூரணரின் இக்கருத்தினை ஒட்டியே "இம்முல்லை முதலியன, அவ்வந்நிலத்துக் கருப்பொருளாகும். இக்கருப்பொருளின் பெயர்களையே அவ்வந்நிலங்கட்கு இட்டு வழங்கலாயினர்" என்று தம் தொல்காப்பிய உரைவளத்தில் குறிப்பிடுகிறார் அருணாசலம்பிள்ளை(1975:ப.79)

நச்சினார்க்கினியர்(1970) நிலங்கள் பூவினாற் பெயர் பெற்றன என்பதை மறுக்கிறார். "இனி இவ்வாறன்றி முல்லை முதலிய பூவாற்பெயர் பெற்றன இவ்வொழுக்கங்களெனின், அவ்வந்நிலங்களுக்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றாற் பெயர் கூறலும் உரியவெனக் கடாயினாற்கு விடையின்மை உணர்க" என்று குறிப்பிடுகிறார். இறையனார் களவியலுரை ஆசிரியரும் நச்சினார்க்கினியரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஏற்றுக் கொள்கிறார். "இனி ஒழுக்கத்தினை திணை என்பாரும் நிலத்தினைத் திணை என்பாரும் என இரு பகுதியர். ஆசிரியர் அது பொருந்தாது, ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. என்னை விளக்காகிய சுடர் இருந்த நிலனும் விளக்கு எனப்பட்டது போல"(இறையனார் களவியலுரை,ப.23) என்று முன்மொழிகிறார்.

ஆழமாக ஆய்ந்து பார்க்கையில், நிலங்கள் பூக்களினால் பெயர் பெறாமல் ஒழுக்கங்களினால் பெயர் பெற்றன என்ற கூற்று மிகவும் பொருத்தமற்றதாய்த் தோன்றுகிறது. அதற்குச் சான்று பகரும் வகையில் "நச்சினார்க்கினியர் போன்றோர் கூறியவாறு ஒழுக்கமே பெயர் வைப்பிற்கு அடிப்படை என்று கொண்டால் குறிஞ்சி மக்கள் மட்டும்தான் புணர்வர், முல்லை நில மக்கள் மட்டும்தான் இருப்பர்; மருத மக்கள் மட்டும் தான் ஊடுவர்; நெய்தல் மக்கள் மட்டும்தான் இரங்குவர்; பாலை மக்கள் மட்டும் தான் பிரிவர் என்றாகும்" என்ற சிந்தனையை முன் வைக்கிறார் க.ப.அறவாணன்(1978:ப.95). இதனால் ஒழுக்கத்தினாலே நிலம் பெயர் பெற்றது என்பது தவறான கருத்து என்பது புலப்படுகின்றது.

"முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம் இவை அவை மலரும் நிலத்தின் பெயருமாம்" என்று அபிதான சிந்தாமணி கூறுகின்றது"(சிங்காரவேலு,2008:ப.1180) தனிநாயக அடிகள்(1962), தம் தமிழ்த்தூது என்ற நூலில், "தொல்காப்பியர் காலத்திற்குப் பன்னூற்றாண்டுகட்கு முற்பட்டத் தமிழ் மக்கள் மலை நாட்டிற்குக் குறிஞ்சி நிலம் எனப் பெயரிட்டார்கள். காந்தள், வேங்கை, ஆரம், அகில் என்ற இவற்றில் ஒன்றின் பெயரால் அதனைக் கூறியிருத்தல் கூடாதோ? குறிஞ்சிப்பூவே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சிறப்புப் பூவாதலால், குறிஞ்சியென மலையையும் மலை சார்ந்த இடத்தையும் குறித்தார்கள். அவ்வாறே பிற நிலங்கட்கும் முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெயர் வைத்ததற்கும் சிறந்த காரணங்கள் உள்ளன' என்று பூக்களினால் நிலம் பெயர் பெற்றதனை விளக்குகிறார். (தனிநாயகம்,பக்.54-55)

"பல்வேறு மலர்கள் ஒரு நிலத்திற் காணப்படுமாயினும், அந்நிலத்தில் சிறப்பாக மிகுதியாகக் காணப்படுவது எப்பூவோ, அப்பூவாலேதான் பெயர் பெற்றுள்ளது. எனவே ஒழுக்கங்களும், நிலங்களும் பூக்களாற்றான் பெயர் பெற்றன என்பது ஒருதலை"(முத்து கண்ணப்பன்,1978:பக்.19-20) என்றும், "குறிஞ்சி முதலிய அகத்தின் ஐந்துறைகளுக்கும், வெட்சி வஞ்சி உழிஞையாகிய புறத்துறை ஐந்தனுக்கும் பூவின் பெயர்களையே இட்டனர். இதனால் தமிழர் நாகரிகம் ஒரு பூ நாகரிகம், கலை நாகரிகம் என்றாகிறது. வாழ்வினை அழகும் மணமும் உடையதாகக் கண்டனர். பொருளிலக்கணம் போல இவ்வகைப் பூக்காட்சியும் உலகில் புதிது; தமிழர்க்கே உரியது" என்று கோவிந்தசாமியும்(1966) தொல்காப்பியரின் இக்கவிதை (திணை) மரபை எண்ணி வியக்கின்றனர். அவ்வாறே அகத்தியலிங்கமும்(2001), "திணைகளை உருவாக்கி அவற்றுக்கும் பூக்களின் பெயரைக் கொடுத்து அவற்றை முதன்மையாக்கி நின்றது தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்ற ஒரு தனி இலக்கிய அல்லது கவிதை மரபாகும்" என்று தம் தொல்காப்பிய உருவாக்கம் என்ற நூலில் விளக்குகிறார். (அகத்தியலிங்கம்,2001.ப.146)

இராகவையங்கார்(1922), "இனி, முற்கூறிய ஐந்து நிலங்களும் குறிஞ்சி முதலாகப் பெயர் பெற்றதன் காரணம் நாம் ஆராய்ந்து கொள்ளற்பாலதாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இப்பெயர்கள் மரம் அல்லது பூ விசேடங்கட்கு உரியன என்பதும், முல்லை முதலியவற்றின் மிகுதி அல்லது சிறப்புப் பற்றி அந்நிலங்கட்குப் பெயர்கள் வழங்கலாயின என்பதும் எளிதில் புலப்படும்" என்று தம் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். (இராகவையங்கார்,1922.பக்.24-25) மேலும் மலர்களைக் குறியீடாகக் கொள்ளும் வழக்கம் பண்டைத் தமிழரைப் போலவே ஐரோப்பியரும் கொண்டிருந்ததனை, "இங்ஙனமே ஐரோப்பியரும், பண்டும் இன்றும் 'லில்லி (Lily) என்ற வெள்ளையல்லி மலரைக் கற்புக் குறியாக வழங்கி வருகின்றனர். இதுபோலவே, அன்புடை இருவர் பிரியுங்கால், அப்பிரிவைக் குறிக்க Forget-me-not என்ற பூவைக் கொடுத்தலும், துக்க மிகுதியை "Weeping Willow' என்ற பூவால் குறித்தலும் அவ்வைரோப்பிய நாட்டு வழக்கம்" என்று ஐரோப்பியரின் மலர்ப் பயன்பாட்டை விளக்கிக் கூறித் தமிழரின் திணைக்குறியீடும் இம்மலர்களினாலேயே அமைந்தது என்று உறுதிபடக் கூறுகிறார். (இராகவையங்கார்,1922.பக்.25)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இக்கருத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில், "தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டனர். அதனால்தான் நிலத்திற்குத் தன் நிலத்தில் பூத்த மலரின் பெயரையே சூட்டினர். இதனை ஒட்டியே தொல்காப்பியர் மணத்திற் சிறந்த முல்லையை முதலிலும், தேனிற் சிறந்த குறிஞ்சியை அடுத்தும், நிறத்திற் சிறந்த மருதத்தை அதற்கடுத்தும், உவமைக்குச் சிறந்த நெய்தலை இறுதியிலும் வைத்தார். மேலும் நிறங்களுக்கெல்லாம் மூலமான செம்மையைக் குறிஞ்சியிலும், வெண்மையை முல்லையிலும், பொன்மையை மருதத்திலும், நீலத்தினை நெய்தலிலும் கண்டு பெயர் சூட்டினார். மேலும் இந்நிலங்கள் திரிந்து உருவான செயற்கை நிலமான பாலைக்கும் வெள்ளையும் சாம்பலும் கலந்த இருவண்ண மலரான பாலை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலரையே பெயராகச் சூட்டினார். இதுபோன்ற ஒரு வாழ்வியல் இலக்கண அமைப்பு உலகில் வேறெந்த மொழியிலும் இல்லை எனலாம்" என்ற கருத்தாக்கம், தமிழரின் மலரினால் பெயரிடும் முறையைத் தனிச்சிறப்புடையதாகக் காட்டுகிறது என்று தமது ஆய்வில் குறிப்பிடுகிறார். (அரங்கநாதன்,2007.ப.22)

'சங்க இலக்கிய மறுவாசிப்பு' என்ற தம் நூலில் செல்வராசு(2005), "தமிழ்கூறு நல்லுலகம் நிலத்தால் பாகுபட்டிருந்தது. அந்நிலங்கள் மலராலும் மரத்தாலும் பெயர் பெற்றிருந்தன. நிலத்து வாழ்க்கைமுறை திணையாக இலக்கண வரையறை பெற்றிருந்தது" என்று நிலங்கள் கருப்பொருளான மலரால் பெயர் பெற்றன என்று வரையறுக்கிறார்(செல்வராசு,2005.ப.9)

ஜே.ஆர்.மார்(1985), திணைக்கோட்பாட்டின் தோற்றம் பற்றி, "தொல்காப்பியனார் ஏழு அகத்திணைக்கு ஐந்து நிலங்களுடன் தொடர்புற்றதெனக் குறிப்பிடுகிறார். முதலாவதான கைக்கிளையும் இறுதியான பெருந்திணையும் தொடர்புடையவையல்ல. மேலும் புவியியற் பிரதேசங்களுக்குரிய பெயர்களான முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பன உண்மையில் முறையே காடு, மலை, பாலை நிலம், பண்படுத்தப்பட்ட நிலம், கடற்கரை ஆகியவற்றில் வளரும் தாவரங்களாகும். முதலில் இப்பெயர்கள் தாவரங்களையே குறித்தன என எண்ணுதல் நியாயமானது. அதன்பிறகு அவை வளரும் பிரதேசங்களைக் குறிக்கத் தொடங்கின. உதாரணமாகக் குறிஞ்சி மலைப் பிரதேசங்களைக் குறிக்கப் பயன்படுவதன் காரணம் நீலகிரி பழனி மலைப் பிரதேசங்களில் கவனத்தைக் கவரும் தாவரமாக இது உள்ளது. அடிக்கடி இல்லாமல் அருமையாகவும் அதே சமயம் மிக அதிகமாகவும் பூக்கும் தன்மையது. அதன்பின் காதல் விடயங்களைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குறிப்பதற்கான சொற்களாக இவை மாறின. அதுபோலவே போருக்குச் சூடிச் சென்ற பூக்களின் பெயரால் புறவிடயங்கள் அழைக்கப்பட்டன"(Marr,J.R.pg.17) என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக ஐவகை நிலத்திற்கும் உண்டான அக, புறப்பெயர்களைத் தக்க காரணங்களைக் கொண்டு விரிவாக விளக்குகிறார். மேலும், "இன்னொரு வகையில் இத்திணைப் பெயர்கள் மற்றத் திராவிட மொழிகளிலும் பூவையோ மரத்தையோ குறிக்கப் பயன்படுகின்றன" என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்(Marr,J.R.pg.18). இதன் வழியாகத் தமிழ்மொழியுடன் மற்ற திராவிட மொழிகளிலும் இத்திணை சார்ந்த பெயரமைப்பின் உட்கூறுகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

மேற்கண்ட அறிஞர்களின் கருத்தாக்கங்களினால் நிலங்கள் ஒழுக்கத்தினால்
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
பெயர் பெற்றன என்ற நச்சினார்க்கினியரின் விளக்கம் பொருத்தமற்றது என்பதும், அந்தந்த நிலத்தில் மலர்ந்த குறிப்பிட்ட மலர்களினாலேயே நிலங்கள் பெயர் பெற்றன என்ற இளம்பூரணரின் கூற்றே பொருத்தமானது என்பதும் தெளிவாகின்றது.

தமிழரின் தனிச்சிறப்பான சிந்தனை முறையாகவும், தமிழ்மொழியின் அறிவுச் சிகரமாகவும் கருதத்தக்கது ஐந்திணைப் பாகுபாடாகும். இதில் குறிப்பால் பொருள் தோற்றுவிக்கும் முறையாகத் தொல்காப்பியர் முன்வைக்கும் திணையியலின் பொருள்கொள்ளும் முறை அமைந்துள்ளது. அதாவது ஒவ்வொரு திணைக்கும் மூன்றுவிதப் பொருள்கள் உண்டு. அவை முதற்பொருள், கருப்பொருள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உரிப்பொருள் என்பன. ஐந்திணைகளின் இந்தப் பொருள் கொள்ளும் முறை, குறியீட்டுப் பண்பை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பிய அகத்திணையியலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் திணைகளுக்கு உரியனவாய்க் காட்டப்பட்ட முதல், கருப்பொருள்கள் வேறுபட்ட சமுதாய வாழ்வு நெறிகளுக்கான அடிப்படைகளாய் அமைந்துள்ளன. மலை, மலை சார்ந்த இடம்; காடு, காடு சார்ந்த இடம், வயல், வயல் சார்ந்த இடம், கடல், கடல் சார்ந்த இடம் எனும் நால்வகைப் பாகுபாடுகளும் அந்நால் நிலங்களின் இயற்கை விளைபொருட்களும், உற்பத்திப் பொருட்களும், உணவுமுறைகளும், மரம், செடி கொடிகளும், இசை முதலானவையும், உற்பத்திக் கருவிகளும் வெவ்வேறுபட்டனவாய் இருப்பதைத் தான் முதற்பொருள் கருப்பொருள் பாகுபாடு காட்டுகின்றது. இவை அகத்திணை இயலில் கூறப்பட்டிருந்தாலும் புறத்திணைக்கும் பொதுவானவையே. அதனால்தான் இவற்றைப் புறத்திணை வாழ்வோடும் இணைத்து ஆராய வேண்டும் என்கிறார் மாதையன்(2004). இவரின் இக்கூற்றிலிருந்து சங்ககால சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த வளர்ச்சிப் போக்கினை ஆராய்ந்து திணைப் பாகுபாட்டின் அடிப்படையை விளங்கிக் கொள்ளலாம் என்பதும், முதல், கருப்பொருள்களின் அடிப்படையில் காதலையும், போரையும், பொதுவான வாழ்க்கை நடைமுறைகளையும் இணைத்து ஆராய்தல் வேண்டும் என்பதும் பெறப்படுகின்றது.

இன்றைய உலகமயமாக்கல் போக்கின் ஒற்றைத் தன்மைக்கு எதிரான பன்மயத் தன்மை சங்கப் பாடல்களிலுள்ள திணைமக் கோட்பாட்டின் கொடையாக உள்ளன என்கிறார் பாமயன், "திணைமக் கோட்பாட்டின் ஒரு கூறு உயிரியல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பன்மயம் (Biological Diversity) ஆகும். இன்றைய அறிவியல் உலகம் கூறுகின்ற இக்கோட்பாடு தமிழர்களின் திணைமக் கோட்பாட்டின் ஓர் இன்றியமையாக் கூறாகும். பல்வகைப்பட்ட மொழிகள், இனங்கள் என்பதுதான் இயற்கை நெறி. அதை மாற்றி, ஒற்றை மொழி - ஒற்றை இனம் என்கின்ற போக்கு ஒட்டுமொத்த அழிவிற்கு வழிவகுக்கும்" என்கிறார்(நெடுஞ்செழியன்,2007.ப.134). இத்தகைய சிறப்பு வாய்ந்த பன்மயத்தைத் திருவள்ளுவர் வலியுறுத்துவதோடு மட்டுமல்லாது, தமது முன்னோர்களின் மிகச் சிறந்த சிந்தனைப்போக்கு இது என்றும் இயம்புகிறார்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஒம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை"
(திருக்குறள் 322)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah ptbupsi

பன்மயம் என்பது சங்க இலக்கியங்களில் எங்கு நோக்கினும் காணக் கிடைக்கின்றது. திணைமக் கோட்பாட்டின் பன்மயத் தன்மைக்கு எடுத்துக்காட்டாய் அமைவது இதன் உயரிய மனிதநேயம் ஆகும்.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம்
இயைவதாயினும் தமியர் உண்டலும் இலரே"
(புறநானூறு, 182:1-2)

எனத் தொடங்கி,

"செல்வத்தின் பயனே ஈதல்
துய்ப்போ மெனினே தப்புந பலவே"
(புறநானூறு, 189:7-8)

என்று எச்சரித்து,

"மறுமை நோக்கின்றோ வன்றே பிறர்
வறுமை நோக்கின்று அவன்கை வண்மையே"
(புறநானூறு, 141:14-15)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எனக் கொடை மடம் படுதலில் முடியும் மனிதநேயத்தின் மாண்பே தமிழரின் திணை வாழ்வியல். இந்த உயரிய மனித நேயம், எப்படி உயிர்ம நேயமாய் மாறும் என்பதைப் பல அகப்பாடல்களும், புறப்பாடல்களும் பதிவு செய்துள்ளன என்று நெடுஞ்செழியன்(2007) திணை வாழ்வியலின் செழுமையைப் பதிவு செய்கிறார்.

இதிலிருந்து இன்றைய அறிவியல் உலகம் கூறுகின்ற உயிரியல் பன்மயம் என்ற கோட்பாடு தமிழர்களின் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட திணைமக் கோட்பாட்டின் ஒரு கூறு என்பதையும், இத்திணைமக் கோட்பாடானது அருட் பண்பினையும், உயரிய மனித நேயத்தினையும், கொடைத் திறத்தையும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் தன்மையையும் வளர்க்கின்ற இயற்கைக் கல்வியை வழங்கி நம் வாழ்க்கை முறையைச் செம்மைப்படுத்தி செழுமையூட்ட முயன்றுள்ளன என்பதையும் அறியலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துகளோடு அல்லது கோட்பாட்டோடு உலக இலக்கியங்களுக்குத் தொடர்புள்ளதாக அய்யப்பப் பணிக்கர்(2012) கூறுகின்றார். நம் இலக்கியக் கோட்பாடான முதல், கரு, உரி என்ற முப்பொருள் (திணை) கோட்பாடு உலக இலக்கியங்கள் அனைத்திற்கும் உரிய அடிப்படையான ஒன்று. எனவே இம்முப்பொருளின் அடிப்படையில் மற்ற இலக்கியங்களை ஆராய்ந்து அதன் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டறியலாம் என்கிறார்.

"நம்முடைய சமஸ்கிருதம், பழங்காலத் தமிழ் இலக்கியக் கோட்பாடு இவற்றை உள்ளடக்கிய இந்தியக் கோட்பாடு அவசியமாகின்றது. இழந்து போன நம் மரபை மீட்பதற்கு, இலக்கியக் கோட்பாட்டை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வேண்டும். இக்கோட்பாட்டைப் படைப்பதற்குச் சில வரையறைகளைப் பின்பற்றலாம். அவை 1. (Recovery), 2. (Discovery), 3. (Invention) என்பதாகும்”. இவ்வாறாக, அய்யப்பப் பணிக்கர்(2012) திணை விரிவாக்கம் பற்றிய கொள்கைக்கு வித்திடுவதுடன், பழைய முப்பொருள் கோட்பாட்டை இன்றைய படைப்புகளுக்கும் பொருத்திப் பார்க்கிறார்.

முதற்பொருளில் இடமும் காலமும் மிக முக்கியக் கூறுகள். இடமானது புவியமைப்பு என்பதோடு மன அமைப்பு அல்லது உள் அமைப்பு என்றும் பொருள்படுத்தலாம். கருப்பொருளைப் பொறுத்தமட்டில் நாம் பொருள்களைக் கூட்டவோ கழிக்கவோ செய்யலாம். இந்த அடிப்படையில் திணையின் விரிவாக்கத்தைக் காணவேண்டும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திணையைப் போலவே உள்ளுறை, உரிப்பொருள் போன்றவையும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். நாம் ஐந்திணையைப் பெற்றுள்ளோம். அதுபோலவே அகமும் புறமும் கலந்த அகப்புறத் திணை இருக்கலாம். உதாரணமாகப் போரும் அமைதியும்" (War and Peace) என்ற நாவலை எடுத்துக்கொண்டால் அதில் போரைப் பற்றியும், அமைதியைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நாவல் வெளியுலகம், உள்ளுலகம் இரண்டையும் உள்ளடக்கியது. சேக்ஸ்பியரின் 'ஆண்டனியும் கிளியோபாட்ராவும்' என்ற நாடகத்தை இந்தக்கருத்தில் நின்று விவாதிக்கலாம். அதாவது ரோமிற்கும், எகிப்திற்கும் இடையே போர் நடந்த போதிலும் ஆண்டனி கிளியோபாட்ரா காதல் இருந்தது. இங்கு அகமும் புறமும் கலந்துள்ள பாங்கினைக் காணலாம்" என்ற

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அய்யப்பப் பணிக்கரின் விவாதத்தைச் சிவமணி(1997) தமது ஆய்வில் முன்வைக்கிறார்.

இந்த விவாதத்தின் மூலம் தமிழ் இலக்கியத் திணை (முப்பொருள்) மரபு தனிச் சிறப்புடையது என்பதோடு, மையம் மாறாமல் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை கொண்டது என்பதும் தெளிவாகிறது. இன்றைய உலக இலக்கியங்களுக்கும் பொருத்தப்பாடுடைய ஒரு திணைக்கோட்பாட்டு மாதிரியைத் தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டினைக் கொண்டு உருவாக்க முடியும் என்பது திணை இலக்கியம் குறித்த அய்யப்பப் பணிக்கரின்(2012) கருத்தாக அமைகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.10 தொகுப்புரை

ஒரு நூற்றாண்டைக் கடந்து விட்டபோதிலும் இன்னமும் சலிப்பையோ வெறுப்பையோ ஏற்படுத்தாத ஒரு வெகுசன ஊடகமாகவே நிலைக்கும் அளவிற்குத் தமிழ்த் திரையிலக்கியம் தமிழ்ச் சமூகத்தின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. *'கவிஞர் வாலியின் தமிழ்த் திரையிசைப்பாடல்களில் அகத்திணை மரபு'* என்னும் இவ்வாய்வானது சமூக இலக்கியத்தை நயம்பட உரைக்க முயலும் இலக்கிய ஆராய்ச்சியாகும். திட்டமிட்டபடி இவ்வாய்வு முழுமை பெற ஆய்வின் முன்னுரை, ஆய்வின் பின்னணி, ஆய்வின் சிக்கல், ஆய்வின் நோக்கம், ஆய்வு வினா, ஆய்வுப் பயன், ஆய்வின் எல்லை, ஆய்வுச் சான்றாதாரங்கள், ஆய்வுத் தொடர்புடைய கருச்சொற்கள் ஆகியன இவ்வியலில் விரிவாகவும் தகுந்த சான்றுகளோடும் விளக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi